# சிலாங்கூர் இன்று

இலவசம்

www.selangorkini.my Media_Selangor SelangorTV selangortv.my MediaSelangor SMART SELANGOR

SELANGOR

திருவள்ளுவர் ஆண்டு 2054 / சோபகிருது வருடம் ஆடி மாதம் / ஜூலை 07/2023 / July 07/2023


## உற்பத்தி ஆற்றல் கூடி, முதலீடு உயர்ந்து வலுவான பொருளாதாரத்துடன் சிலாங்கூர்

**ஷா ஆலம்,** சிலாங்கூர் மந்திரி புசாராக டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி பொறுப்பேற்ற பின் மாநிலம் பல சாதனைகளை புரிந்துள்ளது. அது, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நம் மாநிலத்தின் பங்களிப்பு கடந்தாண்டு 25.5 விழுக்காடாக உயர்வு கண்டுள்ளது. அதற்கு முந்தைய ஆண்டில் இந்த எண்ணிக்கை 24.8 விழுக்காடு மட்டுமே இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்தாண்டில் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி 8.7 விழுக்காடாகப் பதிவான வேளையில் சிலாங்கூர் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி 11.9 விழுக்காட்டை எட்டியது. சிலாங்கூர் மாநிலத்தின் சிறந்த முதலீட்டு சாதனையாக 2018ல் பதிவான RM18 பில்லியன் விளங்குகிறது. இந்த முதலீட்டு மதிப்பு 30 ஆண்டுகளில் சிறந்தது.

கடந்த 2021ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு வளர்ச்சி 3.3 விழுக்காடாக இருந்த நிலையில் சிலாங்கூரின் வளர்ச்சி 5.3 விழுக்காடாக இருந்ததை மலேசிய புள்ளி விவரத் துறை வெளியிட்ட தரவுகள் காட்டுகின்றன.

சிலாங்கூர் தவிர்த்து, மூன்று மாநிலங்கள் பினாங்கு 13.1 % , பகாங் 10 % மற்றும் கோலாலம்பூர் 9.2 % ஆகிய மாநிலங்கள் மட்டுமே தேசிய உள்நாட்டு உற்பத்தியை விட கூடுதல் வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன பெரிக்காத்தான் நேஷனல் தலைவர் டத்தோஸ்ரீ முகமட் அஸ்மின் அலியிடம் இருந்து மாநில நிர்வாகத்திற்கு பொறுப்பேற்ற பிறகு இந்த வெற்றி கிடைத்ததாக டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார் , ஆனால் டத்தோஸ்ரீ முகமட் அஸ்மின் மந்திரி புசாராக இருந்தபோது, முதலீட்டின் மதிப்பு **RM**5 பில்லியனுக்கும் RM7 பில்லியனுக்கும் இடையே இருந்துள்ளது," என்று நேற்றிரவு டத்தாரான் மெர்டேகாவில் சிலாங்கூர் ஹராப்பான் தேர்தல் எந்திரத்தை துவக்கி வைத்த பின் அஸ்மின் கூற்றுக்கு எதிர்வினையாற்றும் போது மந்திரி புசார் அதனை குறிப்பிட்டார்.

முகமட் அஸ்மின் சர்வதேச வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர், ஆனால் அவருக்கு, இங்கு முதலீடு என்ன என்று தெரியவில்லை என்பதும் எனக்கு வருத்தமாக இருக்கிறது. அதே நேரத்தில் அவர் 2018 இல் மந்திரி புசாராக நியமிக்கப்பட்டது தொடர்பான முகமது அஸ்மின் கருத்தையும் விமர்சித்தார்.

ஆதரவாளர்களிடம் இருந்து உற்சாகமான கைத்தட்டலை பெறுகையில், "முகமது அஸ்மின் மறந்துவிடாதீர்கள், ஆறு மாதங்களுக்கு முன்பு உங்களை தோற்கடித்தவன் நான் தான்" என்று கூறினார்.

கடந்த ஆண்டு நவம்பரில் (GE-15) நடைபெற்ற பொதுத் தேர்தலில், 12,729 வாக்குகள் பெரும்பான்மையுடன் முகமட் அஸ்மின் மூன்று தவணைகளாக வைத்திருந்த இடத்தை அமிருடின் கைப்பற்றினார்.




## 1.7 கோடி வெள்ளி ஒதுக்கீடு

### 2014 முதல் ஆலயங்களுக்கும் சமய இயக்கங்களுக்கும்

**ஷா ஆலம்,** சிலாங்கூரில் உள்ள இந்து ஆலயங்கள் மற்றும் சமய அமைப்பு-களுக்கு மாநில அரசு கடந்த பத்தாண்டுகளில் சுமார் 1 கோடியே 73 லட்சத்து 69 ஆயிரம் வெள்ளியை மானியமாக வழங்கியுள்ளது. கடந்த 2014ஆம் ஆண்டு தொடங்கி இவ்வாண்டு ஜூன் மாதம் வரையிலான காலகட்டத்தில் ஆண்டு-தோறும் 82 முதல் 217 வரையிலான ஆலயங்கள் மற்றும் சமய அமைப்புகளுக்கு இந்த மானியம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2014ஆம் ஆண்டில் பத்து லட்சம் வெள்ளியாக இருந்த வழிபாட்டுத் தலங்களுக்கான மானியம் இவ்வாண்டில் கிட்டத்தட்ட 23 லட்சம் வெள்ளியாக உயர்வு கண்டுள்ளது.

முஸ்லீம் அல்லாத வழிபாட்டுத் தலங்களின் மேம்பாட்டிற்காக இவ்வாண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட 80 லட்சம் வெள்ளி மானியத்தில் சுமார் 23 லட்சம் வெள்ளியை இந்து சமய வழிபாட்டுத் தலங்கள் மற்றும் இயக்கங்கள் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. ஆலயங்களைப் புதுப்பிப்பது, விரிவாக்கம் செய்வது மற்றும் சமய நடவடிக்கைகளை மேற்கொள்வது ஆகிய நோக்கங்களுக்காக இந்த மானியம் வழங்கப்படுகிறது. கடந்த 2014ஆம் ஆண்டு முதல் இவ்வாண்டு வரை மாநிலத்திலுள்ள வழிபாட்டுத் தலங்களுக்கு வழங்கப்பட்ட மானியங்கள் பின்வருமாறு-

| எண் | ஆண்டு | ஆலய எண்ணிக்கை | மானியத் தொகை |
|---|---|---|---|
| 1 | 2014 | 82 | வெ.1,050,000.00 |
| 2 | 2015 | 113 | வெ.1,748,380.00 |
| 3 | 2016 | 120 | வெ. 1,748,400.00 |
| 4 | 2017 | 170 | வெ.1,704,500.00 |
| 5 | 2018 | 194 | வெ.1,748.400.00 |
| 6 | 2019 | 217 | வெ.1,724,900.00 |
| 7 | 2020 | 205 | வெ.1,724.000.00 |
| 8 | 2021 | 192 | வெ.1,845,540.00 |
| 9 | 2022 | 174 | வெ.1845,540.00 |
| 10 | 2023 | 176 | வெ.2,230.000.00 |




## கோ டிஜிட்டல் திட்டம் வெ.50,000 வரை வர்த்தக கடனுதவி

**ஷா ஆலம்,** இணையம் வழி வர்த்தகத்தை விரிவுபடுத்த விரும்பும் தொழில்முனைவோர் யாயாசான் ஹிஜ்ரா அறவாரியத்தின் கோ டிஜிட்டல் திட்டத்தின் மூலம் 50,000 வெள்ளி வரை கடனுதவி பெறலாம்.

வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்கள் நடவடிக்கைகளை நவீன தளங்கள் வாயிலாக இலக்கவியல் மயமாக்குவதில் உதவும் நோக்கில் இத்திட்டம் கடந்தாண்டு பிப்ரவரி மாதம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இலக்கவியல் முறையில் தங்கள் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் தங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைக்கான சந்தையை மேலும் விரிவுபடுத்தி கூடுதல் வருமானத்தை ஈட்டுவதற்குரிய வாய்ப்பினை பெற முடியும் என்று ஹிஜ்ரா அறவாரியம் தனது பேஸ்புக் பதிவில் கூறியது.

கோவிட்-19 பெருந்தொற்று காலத்தில் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியிருந்த வணிகர்களுக்கு உதவும் நோக்கில் கோ டிஜிட்டல் திட்டத்தை மாநில அரசு கடந்தாண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் தேதி தொடக்கியது.

சுமார் மூவாயிரம் வணிகர்களை இலக்காக கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டத்தின் கீழ் வர்த்தக நடவடிக்கைகளை இலக்கவியல் முறையில் விரிவுபடுத்துவதற்கு தேவையான கையடக்க கணினி உள்ளிட்ட தொடர்பு சாதனங்களை வாங்க கடனுதவி வழங்கப்படுகிறது.



# நல்ல குடும்பத் தலைவிகளே சிறந்த குடும்பத்தின் திறவுகோல்

**ஈப்போ,** கற்றல் அனைவருக்கும் எப்போதும் அவசியம் திறமையான குடும்பத் தலைவிகளின் கைகளே நல்ல குடும்பத்திற்கு திறவுக்கோள் என கோலசிலாங்கூர் நாடாளுமன்ற உறுப்பினர் கூறினார்.

ஜெராம் தாமான் பெகெர்த்தி மண்டபத்தில் சித்தம் சிலாங்கூர், இந்தியர் சமூக தலைவர், ஜெராம் சட்டமன்ற தொகுதி உடன் இணைந்து ஏற்பாடு செய்த கை விரல் நக ஒப்பனைக் கலைத்திறன் பயிற்சிக்கு வருகை அளித்த கோலசிலாங்கூர் நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோ ஸ்ரீ டாக்டர் சூல்கிப்லி அவர்கள் இப்பயிற்சியில் அதிகமான இந்திய பெண்கள் கலந்து கொண்டமைக்கு அவர்களை பாராட்டி வரவேற்றார். நீங்கள் இந்த கலைத்திறன் பயிற்சியில் கலந்து கொண்டிருக்கிறீர்கள். இப்படிப்பட்ட பயிற்சியில் கலந்து கொண்டதன் வழி நாட்டில் உள்ள மற்ற பெண்களுக்கு முன் உதாரணமாக இருக்கிறீர்கள் என்றார் அவர்.

இங்கு கற்பிக்கப்படுவதை திறமையுடன் கற்று, அன்றாட வாழ்வில் அக்கலையை பயன்படுத்துவதன் மூலம், அக்கலை அழியாமல் காப்பாற்ற படும். கற்றதை குடும்ப உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொள்வதன் வழி அது குடும்ப தொழிலாகவும் வளரும். இதனை மற்றவர்களுடன் தொழில் ரீதியாக பயன்படுத்துவதன் வழி பொருளாதார ரீதியாகவும் பயன் விளைவிக்கும் என்றார்.

இன்றைய காலக் கட்டத்தில் இது போன்ற பயிற்சிகள் மிக அவசியமான ஒன்றாக விளங்குகிறது. நீங்கள் திறமையை வளர்த்துக் கொள்ள ஆர்வமாக இருக்கிறீர்கள், கற்றல் அனைவருக்கும் எப்போதும் அவசியம் , அது மனிதர்களின் மாண்பை உயர்த்தும்.

அது மட்டுமின்றி நாகரீக காலத்தில் பெண்களின் ஆற்றலை , திறமையை வைத்து உலகம் அவர்களை மதிப்பிடுகிறது. ஆக நீங்கள் வீட்டிலும் , வெளியிலும் மதிக்கப்பட வேண்டும் . அதற்கு இது போன்ற பயிற்சிகள் உங்களுக்கு கை கொடுக்கும்.

இன்று உங்களில் பெருவாரியானவர்கள் இதுபோன்ற பயிற்சியில் கலந்து கொண்டது, உங்கள் ஆற்றலை மேம்படுத்துவதில் நீங்கள் காட்டும் ஆர்வத்தை அக்கறையின் பிரதிபலிப்பு என அவர் பாராட்டினார்.

திறமையான குடும்பத் தலைவிகளின் கைகளே நல்ல குடும்பத்தின் திறவுக்கோள். நீங்கள் கற்றதே உங்களை உயர்த்தும். இது குடும்ப தொழிலாகவும் வளரும். உங்கள் நேரமும் பயனான முறையில் செலவிட்ட மன நிம்மதி கிடைக்கும் என்றார்.

பயிற்சி நிறைவைத் தொடர்ந்து இன்றைய நிகழ்விற்கு சிரமம் பாராமல் வருகை அளித்த பங்கேற்பாளர்களுக்கும் சித்தம் சிலாங்கூர் தலைவர் கென்னத் சேம், அதன் துணைத் தலைவர் சரவணன், பெர்மாத்தாங் இந்தியர் கிராமத்து தலைவர் பத்மநாபன், மற்றும்,தோக் யாசிட் அவர்களுக்கும் தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டார் இப்பயிற்சியின் ஏற்பாடு குழுவின் தலைவரும், ஜெராம் இந்தியர்களின் கிராமத்து தலைவருமான திரு : மணிவண்ணன்

# செட்டி பாடாங் பெயர் மீண்டும் நிலைநிறுத்தம்



**கிள்ளான்,** இந்தியச் சமூகத்தின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் பெயர் மாற்றம் கண்ட கிள்ளான் செட்டி பாடாங், இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தனது பழைய பெயரை மீண்டும் பெற உள்ளது.

சிலாங்கூர் மாநில ஆட்சி குழு முடிவு மற்றும் கிள்ளான் நாடாளுமன்ற உறுப்பினர் வீ. கணபதிராவுடன் நடத்தப்பட்ட சந்திப்புக்கு பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகக் கிள்ளான் நகராண்மைக் கழகத் தலைவர் நோராய்னி ரோஸ்லான் தெரிவித்தார்.

டத்தாரான் கிள்ளான் @ செட்டி பாடாங் என்ற பெயருடன் கூடிய அலங்கார வளைவு இன்னும் சில வாரங்களில் அங்கு பொருத்தப்படும் என்று அவர் சொன்னார்.

இதனிடையே, அந்தத் திடலில் செட்டி பாடாங் பெயரை பொறிக்கும் பணிகள் இனியும் தாமதம் அடையக் கூடாது என்று கிள்ளான் நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராவ் தி ஸ்டார் பத்திரிகைக்கு அளித்தப் பேட்டியில் கூறினார்.

செட்டி பாடாங்கிற்குக் கிள்ளான் நகராண்மைக் கழகச் சதுக்கம் என பெயரிடப்பட்டதற்குத் தாம் ஆட்சேபம் தெரிவித்ததைத் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அந்த பெயர் அகற்றப்பட்டதாக அவர் சொன்னார்.

மாநில ஆட்சி குழுவின் முடிவின் அடிப்படையில் அந்தப் பகுதிக்கு செட்டி பாடாங் என்ற பெயர் மறுபடியும் சூட்டப்படும் என்று நான் அப்பொழுது வாக்குறுதி அளித்திருந்தேன் என அவர் குறிப்பிட்டார்.

சுமார் 1.34 ஹெக்டர் பரப்பளவில் அமைந்துள்ள அந்த திடலில் கிள்ளான் நகராண்மைக் கழகச் சதுக்கம் என சூட்டப்பட்ட பெயரை நகராண்மைக் கழகம் கடந்த 2011ம் ஆண்டு ஜூன் மாதம் நான்காம் தேதி அகற்றியது.

இந்தியர்களின் பாரம்பரிய வர்த்தக மையமாக விளங்கி வரும் கிள்ளானில் உள்ள இந்தத் திடலுக்கு செட்டி பாடாங் என்ற பெயர் மறுபடியும் சூட்டப்பட வேண்டும் என்று இந்தியச் சமூகத்தைச் சேர்ந்த அனைத்து தரப்பினரும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

தமிழ்நாட்டின் செட்டியார் சமூகத்தைச் சேர்ந்த வணிகர்கள் கடந்த 1940 ஆம் ஆண்டுகளில் மாட்டு வண்டிகளில் அங்கு உப்பு வியாபாரம் செய்ததன் அடையாளமாக அந்தத் திடலுக்குச் செட்டி பாடாங் என பெயர் சூட்டப்பட்டது.

இந்தத் திடல் விளையாட்டுத் துறையில் பல சாதனைகளைப் புரிந்த பல விளையாட்டாளர்களுக்குப் பயிற்சி மையமாகவும் விளங்கியது. இந்தத் திடலையொட்டி 150 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஸ்ரீ நகரத்தார் தண்டாயுதபாணி ஆலயமும் வீற்றிருக்கிறது.



# பி.பி.ஆர். லெம்பா சுபாங் சாலை சீரமைப்புக்கு வெ.100,000

**பெட்டாலிங் ஜெயா,** லெம்பா சுபாங் 1 மற்றும் 2இல் உள்ள மக்கள் குடியிருப்பு பகுதி (பி.பி.ஆர்.) வளாகத்திலுள்ள சாலைகளை மறுசீரமைப்பு செய்வதற்கு 100,000 வெள்ளி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அந்த சாலை மறுசீரமைப்புப் பணிகள் முற்றுப் பெற்றதைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் சௌகர்யமான முறையில் சாலையைப் பயன்படுத்துவதற்குரிய வாய்ப்பு கிட்டியுள்ளதாக ஸ்ரீ செத்தியா தொகுதி சட்டமன்றத்தின் நடப்பு உறுப்பினரான ஹலிமி அபு பாக்கார் கூறினார்.

புரோஜெக்ட் சிலாங்கூர் பென்யாயாங் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இந்த சீரமைப்பு பணியின் மூலம் அந்த மலிவு விலை அடுக்குமாடி குடியிருப்பைச் சுற்றியுள்ள சாலைகள் செப்பனிடப்பட்டன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அப்பகுதியிலுள்ள சாலைகள் குண்டும் குழியுமாக காணப்பட்டதால் வாகனங்கள் அவற்றை பயன்படுத்த முடியாத சூழல் நிலவி வந்தது. இந்த சீரமைப்பு பணியின் வழி அங்குள்ள மக்கள் சீரானப் பயணத்தை மேற்கொள்வதற்குரிய வாய்ப்பு கிட்டியுள்ளது என்றார் அவர்.

இங்குள்ள லெம்பா சுபாங் 1 பி.பி.ஆர். அடுக்குமாடி குடியிருப்பு பகுதிக்கு ஊராட்சி மன்ற துணையமைச்சர் அக்மால் நசாருல்லா முகமது நாசீருடன் வருகை புரிந்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.



# தேர்தல் பிரசாரத்தில் மத, இன விவகாரங்களை எழுப்பாதீர்

**கிள்ளான்,** தேர்தல் பிரசாரத்தின் போது இன மற்றும் மத விவகாரங்களை பயன்படுத்த வேண்டாம். விரைவில் நடைபெறவிருக்கும் மாநிலத் தேர்தலில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்களுக்கு மேன்மை தங்கிய சிலாகூர் சுல்தான் நினைவுறுத்தியுள்ளார்.

மாநில மக்களின் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய உணர்ச்சிகரமான விஷயங்களையும் தொட வேண்டாம் என அத்தரப்பினரை சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ் கேட்டுக் கொண்டார்.

தேர்தலின் போது விவேகத்துடனும் பொறுப்புணர்வுடனும் சட்டத்திற்கு உட்பட்டும் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடும்படி வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

பல்லின மக்கள் வாழும் இந்த மாநிலத்தில் பிளவுகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக எதிரணியினர் பற்றி தரக்குறைவாக பேசுவது, அவதூறு பரப்புவது போன்ற செயல்களில் அவர்கள் ஈடுபடக்கூடாது எனவும் நான் வலியுறுத்த விரும்புகிறேன் என்றார் அவர்.

இங்குள்ள இஸ்தானா ஆலம் ஷா, அரச மண்டபத்தில் சிலாங்கூர் சட்டமன்றம் கலைக்கப்படுவது தொடர்பான அறிவிப்பை வெளியிடும் நிகழ்வில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

# 37,000 உயிர்களை பலி கொடுத்தவர்கள் ஆட்சி மாற்றத்தை பற்றி பேசலாமா?



**ஷா ஆலம்,** 3 மாத ஆட்சி காலத்தில் 37,000 பேர்களை கோவிட்-19 பெருந் தொற்றுக்கு பலி கொடுத்தவர்கள் தற்போது சிலாங்கூரில் ஆட்சி மாற்றத்தை கொண்டு வரப் போகிறோம் என்பது அடுக்குமா? நியாயமா? என்று சிலாங்கூர் மாநில மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி கேள்வி எழுப்பினார்.

நேற்று ஷா ஆலம் , டத்தாரான் மெர்டேக்காவில் நம்பிக்கை கூட்டணியின் தேர்தல் இயந்திரத்தை தொடக்கி வைத்து பேசிய சிலாங்கூர் காபந்து அரசின் தலைவரான டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி, சிலாங்கூரில் உள்ள 56 சட்டமன்ற தொகுதிகளை கைப்பற்றி மீண்டும் நம்பிக்கை கூட்டணி மற்றும் தேசிய முன்னணியுடன் இணைந்து ஒற்றுமை அரசை நிறுவ கட்சி தொண்டர்களுக்கு ஊக்கமளித்தார்.

அடுத்ததும் நம் ஆட்சியே, மக்களாட்சி என்ற லட்சியத்தோடு சிவப்பு மஞ்சள் பேரணியை கோலாமாக ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட நம்பிக்கை கூட்டணியின் தொண்டர்களுடன் தேர்தல் இயந்திரத்தை தொடக்கி வைத்து, பெரிக்காத்தான் நேசினாலுக்கு எதிரான தாக்குதலை அதிரடியாக தொடங்கினார்.

2018ல் நம்பிக்கை கூட்டணிக்கு மக்கள் அளித்த ஆட்சி அதிகாரத்தை, கீழறுப்பு செய்த துரோகி அஸ்மின். அவர் தலைமையில் சிலாங்கூரில் மீண்டும் ஆட்சியா? என்று கேட்டார் அமிருடின்.

அன்று அஸ்மின் சிலாங்கூரை ஆட்சி செய்ததை விட, இப்பொழுது நம் ஆட்சி இன்னும் சிறப்பாக நடக்கிறது. மலேசியாவிலேயே முதன் முறையாக சிலாங்கூர் மட்டுமே, முதல் ஐந்தாண்டு திட்டம் தீட்டி வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்கிறது. கடந்த, 2021 ஆம் ஆண்டில் மட்டும் சிலாங்கூர் மத்திய அரசுக்கு 24.8% வருவாய் ஈட்டி கொடுத்துள்ளது. அந்த அளவுக்கு சிலாங்கூர் மாநில அரசின் செயல்பாடுகள் சிறப்பாக இயங்கி வருகிறது.

இனவாத அரசியலுக்கு இங்கு இடமில்லை என்பதை சிலாங்கூர் மாநில மக்கள் வருகின்ற தேர்தலில் உணர்த்துவார்கள் என்று கடுமையாக எச்சரித்தார். கடந்த ஐந்தாண்டு காலத்தில் சிலாங்கூரில் அரசு செய்த நற்சேவையை வீடு வீடாக சென்று பிரச்சாரம் செய்வோம் என்று நம்பிக்கை கூட்டணி தொண்டர்களை அழைத்தார்.

இந்த சிவப்பு மஞ்சள் தேர்தல் பேரணி தொடக்க விழாவில் 5 பிரச்சார வாகனங்கள் வெள்ளோட்டம் விடப்பட்டது. மேலும் சிலாங்கூரில் உள்ள 56 சட்டமன்ற தொகுதியையும் மீண்டும் கைப்பற்ற வேண்டும் என்ற இலக்கை குறிக்கும் வகையில் 56 மோட்டார் சைக்கிலும் வெள்ளோட்டம் விடப்பட்டது.

தகவல் தொழில்நுட்ப காலத்தில் நவீன முறையில் பிரச்சாரம் மேற்கொள்ள மாநிலம் முழுவதும் அடுத்த இரண்டு மாத காலத்திற்கு பிரச்சாரம் மேற்கொள்ள பிரச்சார லாரியும் வெள்ளோட்டம் விடப்பட்டது.

ஆக மொத்தத்தில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது, நேற்றைய சிவப்பு மஞ்சள் தேர்தல் இயந்திரம் பேரணி என்றால் அது மிகையாகாது.

நம்பிக்கை கூட்டணியின் தொண்டர்கள் இன, சமய வேற்றுமை இல்லாமல் அனைவரும் ஒற்றுமையாகவும் மிகவும் உற்சாகத்துடன் விடை பெற்று சென்றனர். சிலாங்கூர் மாநில அரசில் இடம் பெற்றுள்ள அமானா கட்சியின் தலைவர் டாக்டர் ஹிஷாம், ஜ.செ.க. வின் சிலாங்கூர் மாநில தலைவர் கோபிந் சிங் டியோ, அமானா கட்சியின் தேசியத் தலைவர் மாட் சாபு ஆகியோர் அனல் பறக்கும் உற்சாக பிரச்சார உரையாற்றினார்கள். ஆக மொத்தத்தில் சிலாங்கூர் நம்பிக்கை கூட்டணியின் தேர்தல் களம் சூடு பிடிக்க தொடங்கி விட்டது.

# திருமண சீர் அலங்கரிப்பு பயிற்சி

**கோலா சிலாங்கூர்,** நமது பாரம்பரியத்தை அடிப்படையாக கொண்ட திருமணம், நிச்சயதார்த்தம், வளைகாப்பு போன்ற புனித நிகழ்வுகளில் சீர் தட்டு எடுப்பது வழக்கமான சடங்காக விளங்குகிறது.

ஆடை, அணிகலன்கள், நகைகள், வளையல், பழ வகைகள், இனிப்புகள் உள்ளிட்ட பொருட்களை காண்போரை கவரும் வகையில் தட்டுகளில் நேர்த்தியான முறையில் அலங்கரிப்பது ஒரு தனிக் கலையாகும்.

இந்த சீர் தட்டு அலங்காரம் என்பது ஒரு சம்பிரதாயத்தின் பிரதிபலிப்பாக மட்டுமின்றி உபரி வருமானம் ஈட்டக் கூடிய ஒரு தொழிலாகவும் தற்போது மாறி வருகிறது. குறைந்த வருமானம் பெறும் தரப்பினர் கூடுதல் வருமானம் ஈட்டுவதற்கு ஏதுவாக அது தரப்பினருக்கு இக்கலை உள்ளிட்ட பல்வேறு பயிற்சித் திட்டங்களை சித்தம் எனப்படும் சிலாங்கூர் இந்திய தொழில் ஆர்வலர் மையம் தற்போது மாநிலம் முழுவதும் நடத்தி வருகிறது. அந்த வகையில் பெர்மாத்தாங் தொகுதி இந்திய சமூகத் தலைவர் கே.பத்மநாபன் ஆதரவுடன் தஞ்சோங் காராங், கம்போங் சுங்கை தெராப் ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலய வளாகத்தில் திருமண சீர் தட்டு அலங்கரிப்பு பயிற்சி கடந்த 3ஆம் தேதி நடத்தப்பட்டது. சீர் தட்டு அலங்கரிப்பது தொடர்பான நுணுக்கங்கள் இந்த பயிற்சியில் கலந்து கொண்டவர்கள் பெற்றதோடு இதன் மூலம் உபரி வருமானம் பெறுவதற்குரிய வாய்ப்பையும் அவர்கள் பெற்றதாக பத்மநாபன் கூறினார். இந்த நிகழ்வு சிறப்பான முறையில் நடைபெறுவதற்கு உதவிய சித்தம் நிர்வாகி எஸ். கென்னத் சேம் மற்றும் சித்தம் பொறுப்பாளர்களுக்கு தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாக அவர் குறிப்பிட்டார். இந்த நிகழ்வில் கோல சிலாங்கூர் கெ அடிலான் தொகுதி தலைவர் தீபன் சுப்பிரமணியம் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

# முதலாவது சிலாங்கூர் திட்டம் - தெளிவான மேம்பாட்டு இலக்கைக் கொண்டுள்ளது

**ஷா ஆலம்,** மக்களின் சுபிட்சமான வாழ்வுக்காகத் தெளிவான இலக்குகளை நடப்பு மாநில அரசு நிர்வாகம் கொண்டுள்ளது என்பதற்கான சான்றுகளில் ஒன்றாக மாநிலத்தின் மேம்பாட்டு கட்டமைப்பாக விளங்கும் முதலாவது சிலாங்கூர் திட்டம் (ஆர்.எஸ்.-1) திகழ்கிறது.

முதலாவது சிலாங்கூர் திட்டம் தவிர்த்து, மக்களின் நலனை மையமாகக் கொண்டு கித்தா சிலாங்கூர் உதவித் தொகுப்பு மற்றும் இல்திஸாம் சிலாங்கூர் பென்யாயாங் (ஐ.எஸ்.பி.) ஆகிய திட்டங்களும் அமல்படுத்தப்பட்டுள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

திரட்டப்பட்டத் தகவல்கள் மற்றும் தரவுகளின் அடிப்படையிலான திட்டமிடலை நாம் கொண்டுள்ளோம் என்பதற்கு முதலாவது சிலாங்கூர் திட்டம் உதாரணமாக விளங்குகிறது. அதோடு மட்டுமின்றி நாட்டின் பொருளாதாரத்திற்கு மிகப்பெரிய பங்களிப்பை வழங்கும் மாநிலமாகச் சிலாங்கூர் தொடர்ந்து விளங்குவதற்கு ஏதுவாக நெருக்கடிகளை விவேகத்துடனும் ஆக்ககரமான முறையிலும் கையாண்டு வருகிறோம் என்றார் அவர்.

பகுதி நேர பொருள் விநியோகிப்பாளர்கள், பிரத்தியேகக் குழந்தைகள் மற்றும் விரிவான கல்வித் திட்டங்களை உள்ளடக்கிய 46 திட்டங்கள் நமது சமூக நலக் கொள்கையின் வழி விரிவு படுத்தப்பட்டுள்ளன என்று அவர் மேலும் சொன்னார்.

வீட்டுடைமைத் திட்டங்கள், கலாச்சாரம், சிலாங்கூர் நீர் உத்தரவாதத் திட்டம், சுங்கை ராசாவ் நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் விவேக கார் நிறுத்தக் கட்டண வசூல் முறை ஆகியவை என்று இங்குள்ள மாநில அரசு தலைமைச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அவர் தெரிவித்தார்.



## சிலாங்கூர் அரசு 5,000 பேர் நிரந்தரப் பதவிகளில் அமர்த்தப் பட்டுள்ளனர்

**ஷா ஆலம்,** சிலாங்கூர் அரசாங்-கத்தால் நியமிக்கப்பட்ட 7,000 ஒப்பந்த அரசு ஊழியர்களில் மொத்தம் 5,000 பேர் இதுவரை நிரந்தரப் பதவிகளில் அமர்த்தப் பட்டுள்ளனர் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

சிலாங்கூர் ஸ்டேட் சர்வீஸ் கமிஷனின் (SPN) பரிந்துரைகளுக்கு இணங்க, நிரந்தர பதவிகளில் அமர்த்தப்பட்டவர்களின் விகிதம் அதிகமாக இருப்பதாக அமிருடின் கூறினார்.

"பெரும்பாலோர் நிர்வாக அதிகாரிகள் உட்பட பல்வேறு பதவிகளில் இருந்து அனுபவம் வாய்ந்த நபர்கள் ஆவர். அவர்கள் பெரும்பாலும் கூட்டாட்சி நிலைப்பதவிகளில் அமர்த்தப்-பட்டுள்ளனர்," என்று அவர் சிலாங்கூர் மெகா கேரியர் கார்னிவல் 2023 இல் கலந்து கொண்ட பிறகு கூறினார்.

ஒப்பந்த நிலை அரசு ஊழியர்களின் நிரந்தர நியமனக் கொள்கை குறித்த சுற்றறிக்கையை பொது சேவைத் துறை (ஜேபிஏ) செயல்படுத்தவில்லை என்றும், ஆனால் அச் சுற்றறிக்கை ரத்து செய்யவில்லை என்று தனக்குத் தெரிவிக்கப்பட்டதாக அமிருடின் கூறினார். சுற்றறிக்கை மூலம் நிரந்தர நியமனம் என்பது பெரும்பாலான மாநிலங்களில் நடைமுறையில் இல்லை என்றும் அவர் கூறினார்.

" நாங்கள் சுற்றறிக்கையை ரத்து செய்தால் தவறான புரிதல் ஏற்படலாம்.அது ஒரு பிரச்சினையாக மாறும் வாய்ப்புண்டு. மேலும், மற்ற மாநிலங்களும் அந்த சுற்றறி-க்கையை ரத்து செய்யவில்லை, செயல்படுத்தவும் இல்லை. இதன் பிறகு, ஜேபிஏவிடமிருந்து அதை பற்றி மேலும் தகவல்களை பெற்று கொள்கிறேன்," என்று அவர் கூறினார்.

15 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றிய ஒப்பந்த அரசு ஊழியர்களின் நிரந்தர நியமனக் கொள்கையை ரத்து செய்யும் முடிவை மாநில அரசு மறு ஆய்வு செய்யும் என்றும், கடந்த வெள்ளிக்கிழமை மாநில அரசு கூட்டுக் குழுவில் (எம்எம்கேஎன்) இந்த விவகாரம் விவாதத்திற்கு உட்படுத்தப்பட்டது; அதன் முடிவை மாநில அரசு செயலாளர் அறிவிப்பார் என்றும் ஜூன் 13 அன்று அமிருடின் தெரிவித்தார்.




## சிலாங்கூர் பள்ளி பெ.ஆ.சங்கங்களுக்கு 1,000 வெள்ளி நிதியுதவி

**ஷா ஆலம்,** பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாகப் பணிகளுக்குத் தலா 1,000 வெள்ளி உதவித் தொகை மாநிலத்தில் உள்ள அனைத்து 939 பள்ளிகளுக்கும் வழங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

இந்த நிதி விரைவில் மாநில கல்வி இலாகா மூலம் சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு விநியோகிக்கப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

இந்த தொகை அதிகமானதாக இல்லாதிருக்கலாம். ஆனால், நாம் அதிக ஒருங்கமைப்புப் பணிகளை மேற்கொள்வற்குரிய அறிமுக ஏற்பாடாவும் பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் மேலும் சிறப்பாகச் செயல்படுவதற்கு வாய்ப்பாகவும் அமையும் என்று அவர் தெரிவித்தார்.

சிறப்பாகச் செயல்படும் பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் கற்றல், கற்பித்தலில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குப் பெரும் துணையாக இருக்க இயலும் என்றார் அவர்.

நேற்று இங்குள்ள ராஜா மூடா மூசா மண்டபத்தில் நடைபெற்ற கித்தா சிலாங்கூர் கல்வி இலக்குத் திட்டத்தை தொடக்கி வைக்கும் நிகழ்வுக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தற்போது சவால் மிக்கதாக விளங்கும் கல்வி முயற்சிகளை மேலும் ஆக்ககரமானதாக்குவதற்கு ஏதுவாக பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் வலுவான ஒற்றுமை உருவாகும் என தாம் எதிர்பார்ப்பதாக அவர் சொன்னார்.

# ரூமா சிலாங்கூர் கூ வீட்டுத் திட்டம்

**ஷா ஆலம்,** ரூமா சிலாங்கூர் கூ 3.0 வீட்டுத் திட்டம் உட்பட பல திட்டங்கள் மூலம் அதிகமான மக்களுக்குத் தரமான, வசதியான மற்றும் பாதுகாப்பான வீடுகள் இருப்பதை உறுதி செய்வதில் மாநில அரசு உறுதியாக உள்ளது. இதைத் தவிர, ஸ்மார்ட் சேவா திட்டம் போன்ற பிற திட்டங்கள் மக்களுக்குச் சொந்தமான வீடு மட்டுமின்றி வசதியான வசிப்பிடத்தையும் உறுதி செய்வ-தற்காக உருவாக்கப் பட்டன என்றார் டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி.

“அதனால்தான் நாங்கள் பல நடவடிக்கைகளை செயல்படுத்தி வருகிறோம், மேலும் பல திட்டங்கள் எதிர்காலத்தில் உருவாக்கப்படும்” என்று அவர் கூறினார். மேலும் விவரித்த அமிருடின், ரூமா சிலாங்கூர் கூ 3.0 வீட்டுத்திட்டம் கட்டுப்பாடான விலையில் அதாவது RM250,000 மற்றும் அதற்கும் குறைவாக உள்ளது என்றார்.

“சுமார் 60,000 யூனிட்டுகள் அங்கீகரி-க்கப்பட்ட நிலையில் தற்போது சுமார் 4,500 யூனிட்கள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், சுமார் 7,000 கட்டுமானத்தில் உள்ளன. மீதமுள்ளவை மேம்பாட்டு திட்ட அனுமதியைப் பெற்றுள்ளன” என்று அவர் கூறினார்.

பிப்ரவரி 1 வரை 83,603 விண்ணப்பங்கள் பதிவு செய்ய-ப்பட்டுள்ள நிலையில், 2025 ஆம் ஆண்டுக்குள் சிலாங்கூர்கூ ரூமா 3.0 வீட்டுத் திட்டத்தின் மூலம் 60,000 குடியிருப்புகளை உருவாக்க மாநில அரசு இலக்கு வைத்துள்ளது என வீட்டுத் துறை எஸ்கோ ரோட்சியா இஸ்மாயில் கூறினார். ரூமா சிலாங்கூர்கூ வை சொந்தமாக வாங்க முடியாத குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட பிரிவினர் ஸ்மார்ட் சேவா திட்டம் வழி பயன் பெறலாம்.

அத்திட்டத்தின் படி குறைந்தபட்ச வாடகை காலம் இரண்டு ஆண்டுகள் ஆகும். ஒரு குறிப்பிட்ட யூனிட்டில் வசிக்கும் ஒருவர் வாடகை செலுத்திய தொகையில் 30 சதவிகிதம் வாடகை அந்த வீட்டிற்கான முன் பணமாக ஏற்றுக்கொண்டு, தொடர்ந்து செலுத்த-ப்படும் பணத்தை வீட்டுக்கு தவணை கட்டணமாக ஏற்றுக்கொண்டு குறிப்பிட்ட காலத்திற்கு பின் வீட்டை அவருக்கு உரிமையாக்குவது இத்திட்டத்தின் நோக்கம் என்றார் அவர்.



# வேலைவாய்ப்பு சந்தை 2023

## 6,000 வருகையாளர்களை ஈர்த்தது



**ஷா ஆலம்,** சிலாங்கூர் மெகா கேரியர் கார்னிவல் எனப்படும் வேலை வாய்ப்பு சந்தை 2023 பிற மாநிலங்களில் இருந்து வருகை புரிந்தோரின் வரவேற்பு அசாதாரணமான ஒன்றாக இருந்தது.

மலாக்கா மற்றும் நெகிரி செம்பிலானைச் சேர்ந்தவர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்று உள்ளதாகப் பதிவுகள் காட்டுகின்றன என மனித மூலதனத் துறை பொறுப்பு மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் கூறினார். சனிக்கிழமையன்று கிட்டத்தட்ட 6,000 வருகையாளர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டது பதிவு செய்ய-ப்பட்டுள்ளது என முகமட் கைருடின் ஓத்மான் கூறினார். மேலும், பதிவு செய்யாத பங்கேற்பாளர்களும் உண்டு.

“இந்நிகழ்வில் மாநில அரசின் துணை நிறுவனங்கள் உட்பட 100க்கும் மேற்பட்ட முதலாளிகளுக்கான விண்ணப்ப செயல்முறையை நாங்கள் எளிதாக்கி உள்ளோம். நேற்று ஷா ஆலம் சிட்டி கவுன்சில் கன்வென்ஷன் சென்டரில் (எம்பிஎஸ்ஏ) நடந்த நிகழ்வின் நிறைவு விழாவில் அவர் இவ்வாறு கூறினார்.

கடந்த ஆண்டு 2.9 சதவீதமாக இருந்த வேலையின்மை விகிதம் இந்த ஆண்டின் முதல் காலாண்டில் 2.6 சதவீதமாக குறைந்திருப்பது டத்தோ மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரியின் நிர்வாகத்தின் கொள்கைகளின் பலனாகும் என்று முகமட் கைருடின் மேலும் கூறினார்.

“மாநில அரசின் நோக்கம் மக்களுக்கு ஒரு வேலை தேடும் தளத்தை வழங்குவதாகும் சிலாங்கூரில் வேலை இல்லாமல் பலர் இருப்பதாக கூறினால், அது உண்மையல்ல என மேலும் தெரிவித்தார். சிலாங்கூர் மெகா கேரியர் கார்னிவல் 2023 இம்முறை F&B (உணவு மற்றும் குளிர்பானம்), சேவைகள், வாகனம், கல்வி, விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாத் துறைகள் உட்பட 100க்கும் மேற்பட்ட நிறுவனங்களை உள்ளடக்கியது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் முதன் முதலில் நடைபெற்ற இந்த நிகழ்வு மொத்தம் 1,996 நபர்களுக்கு வேலை கிடைக்க உதவியது குறிப்பிடத்தக்கது.



# 4.5 மில்லியன் சுற்றுலாப் பயணி

**கோலாலம்பூர்,** மலேசியா இந்த ஆண்டின் முதல் காலாண்டில் 4.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளைப் பதிவு செய்துள்ளது. அவர்களில் பெரும்பாலோர் ஆசியான் நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஆவர். இது தேசிய சுற்றுலாத் துறையின் சாதகமான வளர்ச்சியைக் குறிக்கிறது.

இந்த நிலை தொடர்ந்தால், மலேசியா இவ்வாண்டு 16.1 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் இலக்கை எட்டும் என்று அமைச்சகம் நம்பிக்கை கொண்டுள்ளது. இதன் மூலம் RM49 பில்லியனுக்கும் அதிகமாக சுற்றுலா வருவாய் எதிர்பார்க்கப் படுகிறது என துணை சுற்றுலா, கலை மற்றும் கலாச்சார அமைச்சர் கைருல் ஃபிர்தௌஸ் அக்பர் கான் கூறினார்.

“கோவிட்-19 இலிருந்து பெரும்பாலான நாடுகளை சேர்ந்தவர்கள் மீண்டு வருவதன் மூலம் சீனாவின் சமீபத்திய எல்லை திறப்பு உட்பட பல நாடுகளின் எல்லைகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன” என்று அவர் பெர்னாமாவிடம் கூறினார்.

சுற்றுலா மலேசியாவின் ஒத்துழைப்பின் மூலம், உலகெங்கிலும் உள்ள சுற்றுலாப் பயணிகளின் தேர்வாக மலேசியா தொடர்ந்து இருப்பதை உறுதிசெய்ய அதிக திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் செயல்படுத்தப்படுகின்றன.

ஆசியான் நாடுகளைத் தவிர, மத்திய கிழக்கு, சீனா, இந்தியா மற்றும் ஐரோப்பியா போன்ற நாடுகளின் கவனத்தையும் மலேசியா ஈர்த்துள்ளது என மோதேக் மற்றும் சுற்றுலா மலேசியா அடையாளம் கண்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

சபா, சரவாக் மற்றும் பிற மாநிலங்களின் இயற்கை வளம் மற்றும் அழகு தற்போது சீனா, தைவான் மற்றும் கொரியாவிலிருந்து வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளை கவனத்தைக் ஈர்த்துள்ளது என்றார்.

கோவிட்-19 தொற்றுநோய்க்கு முன்னர், சீன சுற்றுலாப் பயணிகள் சபாவிற்கு முக்கிய சுற்றுலா பயணிகளாக இருந்தனர்; 2019 இல் 598,566 பேர் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.




# சோளப் பயிரீட்டுத் திட்டம் ஜூலை மாதம் தொடங்கும்

**ஷா ஆலம்,** கோல லங்காட் செலாத்தான், சுங்கை கெலாம்பு பகுதியில் 200 ஏக்கர் பரப்பளவில் தானிய சோளத்தைப் பயிடும் திட்டத்தை சிலாங்கூர் மாநில விவசாய மேம்பாட்டுக் கழகம் (பி.கே.பி.எஸ்.) அடுத்த மாதம் தொடங்கி கட்டங் கட்டமாக மேற்கொள்ளும்.

உணவு பாதுகாப்பு முன்னெடுப்பின் ஒரு பகுதியாக விளங்கும் இத்திட்டம் வெள்ளம் மற்றும் தொழில்நுட்ப பிரச்சனைகளால் சிறிது காலம் தடைபட்டிருந்ததாக பி.கே.பி.எஸ். தலைமைச் செயல்முறை அதிகாரி டாக்டர் முகமது கைரில் முகமது ராஸி கூறினார்.

சுங்கை கெலாம்பு தவிர்த்து பெஸ்தாரி ஜெயாவிலும் இத்தகைய சோளப் பயிரீட்டுத் திட்டத்தை பி.கே.பி.எஸ். அமல்படுத்தியுள்ளதாகக் கூறிய அவர், சிலாங்கூர் ஃப்ரூட் வேலிக்கு அருகாமையில் 200 ஏக்கர் நிலப்பரப்பில் அடுத்தாண்டு இத்திட்டம் தொடங்கப்படும் என்றார்.

நெகிரி செம்பிலான் மாநிலத்தின் கிம்மாசில் 300 ஏக்கரில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்த இந்த திட்டம் தீர்க்கப்படா-மலிருக்கும் சில தொழில் நுட்ப பிரச்சனைகளால் இன்னும் தொடங்கப்-படாமலிருப்பதாக அவர் தெரிவித்தார்.

தானிய சோளப் பயிரீட்டுத் திட்டத்தை மேற்கொள்வதற்காகச் சிலாங்கூர் மாநில அரசு பி.கே.பி.எஸ். வாயிலாக நெகிரி செம்பிலான் மாநில அரசுடன் கடந்தாண்டு மே மாதம் 18ஆம் தேதி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழு-த்திட்டது.

கோல லங்காட் மற்றும் நெகிரி செம்பிலானில் சுமார் 30 லட்சம் வெள்ளி முதலீட்டில் மேற்கொள்ளப்படும் இந்த சோளப் பயிரீட்டுத் திட்டத்தின் வாயிலாகச் சிலாங்கூரில் கோழி மற்றும் கால் நடைகளுக்கான தீவினத்திற்கு வெளிநாடுகளைச் சார்ந்திருப்பதை குறைக்க இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தேர்தலில் மக்கள் சரியான முடிவை எடுக்க - பொருளாதார அடைவு நிலை உதவும்

**ஷா ஆலம்,** பக்கத்தான் ஹராப்பான் ஆட்சியில் ஆண்டு தோறும் அதிகரித்து வரும் பொருளாதார வளர்ச்சியைத் தொடர்ந்து நிலை நிறுத்துவதற்கு ஏதுவாக எதிர்வரும் மாநிலத் தேர்தலில் மக்கள் இந்த ஆட்சியை மீண்டும் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

சிலாங்கூர் வளர்ச்சியடைந்த மாநிலமாகவும் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதிக பங்களிப்பை வழங்கும் மாநிலமாகவும் விளங்குவதால் மக்கள் தங்கள் எதிர்காலத்தைப் பணயம் வைக்கக்கூடாது என்று இளம் தலைமுறையின் மேம்பாடு, விளையாட்டு மற்றும் மனுக்குல மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் முகமது கைருடின் ஓத்மான் கூறினார்.



ஹராப்பான் அரசாங்கத்தைத் தக்க வைத்துக் கொள்வதன் மூலம் மக்கள் இத்தேர்தலில் சரியான முடிவினை எடுப்பார்கள் எனத் தாம் நம்புவதாக அவர் குறிப்பிட்டார். நேற்று இங்கு நடைபெற்ற வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி வழங்கும் நிகழ்வுக்குத் தலைமையேற்றப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஹராப்பான் தலைமையிலான நிர்வாகத்தின் வாயிலாக மாநிலத்தின் கூடுதல் வருமானம் பல்வேறு சமூக நலத் திட்டங்கள் வாயிலாக மீண்டும் மக்களுக்கே வழங்கப்படுவதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி இம்மாதம் 9ஆம் தேதி கூறியிருந்தார்.

## RM 5,000 குறைவான வருமானம் பெறுபவர்களுக்கு இலவச நீர்த்திட்டம்



**சிப்பாங்,** 2020 ஆம் ஆண்டு முதல் மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட இலவச நீர்த்திட்டம், உண்மையில் உதவி பெற தகுதியுள்ள குடியிருப்பாளர்களுக்கு மட்டுமே பயன் அளிப்பதை உறுதிப்படுத்தும் வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

டாருல் எஹ்சான் நீர் திட்டத்தின் மூலம் 20 கன மீட்டர் இலவச நீரை RM 5,000 மற்றும் அதற்கும் குறைவான வருமானம் பெறும் குடும்பங்கள் அனுபவிக்கின்றனர் என்று உள்கட்டமைப்பு துறையின் பொறுப்பு உறுப்பினர் இஷாம் அசிம் விளக்கினார்.

"முன்பு நாங்கள் அதை RM 4,000 மற்றும் அதற்கும் குறைவான வருமானம் பெறும் குடும்பங்களுக்காக அறிமுகப்படுத்தினோம், பின்னர் அதன் தகுதி தேவையை மேம்படுத்தினோம். இதனால் அதிகமான மக்கள் இந்த திட்டத்தின் மூலம் பயன் அடைந்துள்ளனர்," என்று அவர் கூறினார்.

டாருல் எஹ்சான் நீர் திட்டத்தைச் செயல்படுத்துவதில் மாநில அரசு அதிகாரத்துவத்தைக் கடைப்பிடிப்பதாக சிலாங்கூர் பாஸ் கமிஷனர் டத்தோ டாக்டர் அஹமட் யூனுஸ் ஹைரி கூறியது குறித்து அவர் கருத்து தெரிவித்தார்.

நீர் விரயமாவதை தவிர்க்கும் நோக்கில் இந்த திட்டம் மேம்படுத்தப் பட்டதாக இஷாம் கூறினார்.

"இந்த திட்டம் டாருல் எஹ்சான் நீர் திட்டம் என மறு பெயரிடப்பட்டுள்ளது இதனால் உண்மையிலேயே தகுதியானவர்கள் மட்டுமே பலன் பெறுவார்கள்," என்று அவர் கூறினார். மேலும், இத்திட்டத்திற்கான இணைய விண்ணப்பங்கள் ஆண்டு முழுவதும் திறந்திருக்கும்.

கடந்த ஆண்டு அக்டோபர் 1 ஆம் தேதி முதல், மாநில அரசு நீர் திட்டத்திற்கான தகுதி நிபந்தனைகளை மாற்றியது அதாவது அதிகபட்ச குடும்ப வருமான வரம்பை RM4,000 லிருந்து RM5,000 மற்றும் அதற்கும் குறைவான வருமான வரம்பை கொண்டிருக்க வேண்டும்.



## சாலையைச் சீரமைக்க வெ.800,000 ஒதுக்கீடு

**ஷா ஆலம்,** வெள்ளம் காரணமாக கோல சிலாங்கூர், கம்போங் பெஸ்தாரி ஜெயா, ஜாலான் லோரோங் மாவார் 6இல் ஏற்பட்ட சேதம் பெர்மாத்தாங் சட்டமன்ற உறுப்பினரின் கவனத்தை ஈர்த்துள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஏற்பட்ட வெள்ளத்தில் அந்த சாலை பயன்படுத்த முடியாத அளவுக்குக் கடுமையாகச் சேதமடைந்தது.

போக்குவரத்துக்குப் பிரதான வழியாக விளங்கிய இந்த சாலை பழுதடைந்த காரணத்தால் பெஸ்தாரி ஜெயா வட்டார மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வந்தனர்.

மாநில அரசின் 800,000 வெள்ளி நிதி ஒதுக்கீட்டில் இந்த சாலை மறுசீரமைப்பு செய்யப்பட்டதாகப் பெர்மாத்தாங் தொகுதி உறுப்பினர் ரோசானா ஜைனால் அபிடின் கூறினார்.

கடந்தாண்டு ஏற்பட்ட மோசமான வெள்ளத்தில் ஜாலான் லோரோங் மாவார் 6 கடுமையாக பாதிப்புக்குள்ளானது. இந்த சாலை சீரமைக்கப்பட்டதன் மூலம் பெஸ்தாரி ஜெயா மக்கள் இதுநாள் வரை எதிர் நோக்கி வந்த போக்குவரத்துப் பிரச்சனைக்கு தீர்வு ஏற்பட்டுள்ளது என்றார் அவர்.

கும்புலான் செமஸ்தா சென். பெர்ஹாட் நிறுவனம் மூலம் இந்த சாலையைச் சீரமைப்பதற்கான பொறுப்பைக் கோல சிலாங்கூர் மாவட்ட மன்றம் பொதுப்பணித் துறைக்கு வழங்கியிருந்தது.

## சட்டமன்றம் கலைக்கப்பட்டாலும் மலிவு விற்பனைத் தொடரும்

**ஷா ஆலம்,** சிலாங்கூர் மாநில சட்டமன்றம் கலைக்கப்பட்டாலும் சிலாங்கூர் மாநில விவசாய மேம்பாட்டுக் கழகத்தின் (பி.கே.பி.எஸ்.) ஏற்பாட்டில் நடைபெறும் மலிவு விற்பனைக்கு எந்த பாதிப்பும் வராது. வாழ்க்கைச் செலவின அதிகரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவும் நோக்கிலான இந்த ரஹ்மா ஏசான் மலிவு விற்பனைத் திட்டம் மாநிலத்திலுள்ள அனைத்து 56 தொகுதிகளிலும் தொடர்ந்து நடத்தப்படும் என்று விவசாயத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இஷாம் ஹஷிம் கூறினார். இதற்கான திட்டம் வரையப்பட்டு விட்டதோடு மாநிலச் சட்டமன்றம் கலைக்கப்பட்டாலும் எதிர்வரும் செப்டம்பர் மாதம் வரை இந்த திட்டத்தை நாங்கள் நிச்சயம் தொடர்வோம். குடும்பச் செலவினத்தைக் குறைக்க மாநில அரசின் இந்த திட்டம் துணை புரிகிறது என அவர் சொன்னார். இந்த திட்டத்தின் மூலம் பலர் பயன்பெறுவதால் இதனை அவசியம் தொடர வேண்டும். ஹாஜ்ஜுப் பெருநாளின் போது பொது மக்கள் அத்தியாவசியப் பொருள்களைப் பெறுவதற்கு ஏதுவாக சிறப்பு விற்பனைக்கு ஏற்பாடு செய்யவுள்ளோம் என்றார் அவர்.

## எஸ்.பி.எம்' மில் சிறப்பு தேர்ச்சி - பரிசு

**ஷா ஆலம்,** பத்தாங் காலி மக்கள் சேவை மையம் 100 சிறந்த எஸ்.பி.எம் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கவுள்ளது.

8A மற்றும் அதற்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு (RM250) வழங்கப்படும் அதே வேளையில் 7A (RM200), 6A (RM150) மற்றும் 5A (RM100) பெற்ற மாணவர்களுக்கும் ரொக்கப் பரிசு வழங்கப்படும் என அதன் ஒருங்கிணைப்பாளர் சைபுடின் ஷாபி முஹம்மது தெரிவித்துள்ளார்.

"இந்தப் பரிசு தகுதியுடைய முதல் 100 மாணவர்களுக்கு வழங்கப்படும். "இந்தச் சிறிய முயற்சி, பத்தாங் காலியில் உள்ள மாணவர்கள் தங்கள் படிப்பை உயர் நிலைக்கு தொடர ஊக்குவிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்," என்று அவர் சிலாங்கூர் கினியிடம் கூறினார்.

பரிசு பெறுவதற்கான நிபந்தனைகளில் மாணவர்கள் பத்தாங் காலி தொகுதியில் உள்ள பள்ளிக்குச் செல்ல வேண்டும் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் தொகுதியின் வாக்காளர்களாக பதிவு செய்திருக்க வேண்டும் என்று அவர் கூறினார். உலு சிலாங்கூர் ஜிபிஎம்எஸ், உலு சிலாங்கூர் மசூதி இளைஞர் சங்கம் மற்றும் உலு சிலாங்கூர் நாடாளுமன்ற ஒருங்கிணைப்பாளர் ஆகியோருடன் இணைந்து இந்த நிகழ்ச்சி ஜூன் 20ஆம் தேதி இரவு 8.00 மணிக்கு புக்கிட் செந்தோசா சமூக மண்டபத்தில் நடைபெறும்.



## வெ.400,000 செலவில் புதிய மண்டபம்



ஷா ஆலம், ரவாங்கிலுள்ள கம்போங் சுங்கை பாக்காவில் திறந்த வெளி மண்டபம் நிர்மாணிப்பதற்காக 400,000 வெள்ளி ஒதுக்கப்பட்டுள்ளதாக ரவாங் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சுவா வேய் கியாட் கூறினார்.

புரோஜெக்ட் சிலாங்கூர் பென்யாயாங் (பி.எஸ்.பி.) எனும் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படவுள்ள இந்த மண்டபத்தின் கட்டுமானப் பணிகள் எதிர்வரும் ஆகஸ்டு மாதம் தொடங்கப்படும் என்று அவர் சொன்னார்.

இந்த மண்டபம் பூர்த்தியானவுடன் இப்பகுதியில் உள்ள மூன்று குடியிருப்புகளைச் சேர்ந்த சுமார் 10,000 பேர் பயன் பெறுவதற்குரிய வாய்ப்பு கிட்டும் என்று அவர் குறிப்பிட்டார். கூடைப்பந்து மைதானம் மற்றும் இதர அடிப்படை வசதிகளை உள்ளடக்கிய இந்த மண்டபத்தின் கட்டுமானப் பணிகள் எதிர்வரும் ஆகஸ்டு மாதம் தொடங்கப்படும். அதற்கு முன்னதாக, அந்த மண்டபம் நிர்மாணிக்கப்படவுள்ள பகுதியை நாங்கள் பார்வையிடவுள்ளோம் என அவர் சொன்னார். சம்பந்தப்பட்ட இடத்தில் நிலவும் பொது மண்டபம் இல்லாத பிரச்சனைக்குத் தீர்வு காணும் நோக்கில் இத்திட்டம் அமல்படுத்தப்படுகிறது.

இவ்விடத்தைச் சுற்றியுள்ள கன்றி ஹோம், சவுஜானா ரவாங் மற்றும் கோத்தா எமரால்டு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குடியிருப்பாளர்களும் பயன் பெறும் வகையில் இந்த மண்டப நிர்மாணிப்பு அமையும் என்றார் அவர். இப்பகுதி மக்கள் இந்த மண்டபத்தை திருமணம், விருந்து மற்றும் இதர நிகழ்வுகளுக்குக் குறைந்த வாடகையில் பெற முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.



## 387 குடும்பங்களுக்கு வெ.100,000

**ஷா ஆலம்,** பாயா ஜெராஸ் தொகுதியில் கடந்த மார்ச் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட ஆறு கிராமங்களைச் சேர்ந்த 387 குடும்பங்களுக்கு மாநில அரசின் சார்பில் நிதியுதவி வழங்கப்பட்டது.

கம்போங் குபு காஜா (265 குடும்பங்கள்), கம்போங் பாயா ஜெராஸ் ஹிலிர் (41 குடும்பங்கள்), தாமான் பாயா ஜெராஸ் பெர்மாய் (38 குடும்பங்கள்), கம்போங் பாயா ஜெராஸ் டாலாம் (24 குடும்பங்கள்), கம்போங் பாயா ஜெராஸ் தெங்கா (2 குடும்பங்கள்), கம்போங் மெர்பாவ் செம்பாக் (17 குடும்பங்கள்) ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கு 96,750 வெள்ளி வழங்கப்பட்டதாகத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் முகமது கைருடின் ஓத்மான் கூறினார். வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களின் சுமையைக் குறைப்பதில் இந்த நிதி ஓரளவு துணை புரியும் என நம்புகிறோம். அதற்கும் மேலாக எதிர்காலத்தில் பாயா ஜெராஸ் பகுதியில் வெள்ளம் ஏற்படுவதைத் தடுப்பது குறித்து வட்டார மக்களுடன் விவாதிக்கும் நோக்கிலும் இந்த சந்திப்பு நிகழ்வுக்கு ஏற்பாடு செய்துள்ளோம் என்று அவர் சொன்னார். மாநிலத்தில் குறிப்பாகப் பாயா ஜெராஸ் தொகுதியில் மக்கள் நலனுக்கான திட்டங்களை முன்னெடுப்பதை இந்த சந்திப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது என்றார் அவர். முன்னதாக அவர், பாயா ஜெராஸ் தெங்கா, எம்பிஎஸ்ஏ மண்டபத்தில் நடைபெற்ற வெள்ள உதவி நிதியளிப்பு மற்றும் வெள்ளத் தடுப்புத் தொடர்பான விளக்கமளிப்பு நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். அந்த வெள்ளப் பேரிடரின் போது தற்காலிக நிவாரண மையங்களில் அடைக்கலம் புகுந்தவர்களுக்கு 500 வெள்ளியும் நிவாரண மையம் செல்லாதவர்களுக்கு 250 வெள்ளியும் உதவித் தொகையாக வழங்கப்பட்டது.

## ரவாங்கைச் சுற்றுலாத் தலமாக மாற்ற எண்ணம்




**ஷா ஆலம்,** ரவாங்கைச் சுற்றுலாத் தலமாக மாற்ற அதன் பிரதிநிதிகள் விரும்பு-வதற்கு வரலாற்றுச்-சின்னங்கள் மற்றும் இயற்கை அழகுகள் நிறைந்த அப்பகுதியின் தனித்துவமும் ஒரு காரணமாகும். இப்பகுதியில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு நோக்கம் கொண்டுள்ளது. இங்குள்ள மக்களுக்கு நன்மைகளை வழங்குவதற்கும் அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான கூடுதலாகத் தொழில்துறை தொடர்ந்து வளர்ச்சியடைவதை உறுதி செய்வதற்கும் ஆகும் என அவர் விளக்கினார்.

"ரவாங் தனித்துவமானது, ஏனென்றால் 1908 ஆம் ஆண்டு முதல் நிலக்கரி சுரங்க பத்து அரங்கில் உள்ளது, அங்கு சுற்றுலாப் பயணிகள் சுரங்கங்கள், புகைபோக்கிகள் என பல சுரங்க நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டவையைப் பார்வையிட முடியும்.

"உத்தான் ரிம்பா டெம்பிள்ர், காஞ்சிங் சுற்றுச்சூழல் வனப் பூங்கா மற்றும் சிலாங்கூர் ஃபுருட் வெளி போன்ற சுற்றுச்சூழல் சுற்றுலாப் பகுதிகள் இங்கு உள்ளன. அவை குறிப்பாக வார இறுதி நாட்களில் சுற்றுலா தலங்களாக மாறுகின்றன," என்று அவரைத் தொடர்பு கொண்டபோது கூறினார்.

பார்வையாளர்களின் பாதுகாப்பிற்காக அந்த பகுதியில் உள்ள மோசமான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த சுற்றுலா சிலாங்கூருக்கு ஒரு பரிந்துரையை சமர்ப்பிக்க விரும்புவதாக வெய் கியாட் விளக்கினார்.

## வெ.350,000 செலவில் வெள்ள நீர் சேகரிப்பு



**சுபாங் ஜெயா,** இங்குள்ள யு.எஸ்.ஜே.1 தொழில் பேட்டை பகுதியில் ஏற்படும் வெள்ளப் பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு ஏதுவாக ஜாலான் யு.எஸ்.ஜே.1/2 பகுதியில் வெள்ள நீர் சேகரிப்பு குளம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

மொத்தம் மூன்று லட்சத்து 34 ஆயிரத்து 631 வெள்ளி மதிப்பிலான இந்த வெள்ள நீர் சேகரிப்பு குளத் திட்டம் இம்மாதம் 23ஆம் தேதி தொடங்கி செப்டம்பர் மாதம் 14ஆம் தேதி முற்றுப்பெறும் என்று சுபாங் ஜெயா சட்டமன்ற உறுப்பினர் இங் மேய் ஸீ கூறினார்.

இந்த வெள்ள நீர் சேகரிப்பு குளத் திட்டம் ப்ராஜெக்ட் பென்யாயாங் சிலாங்கூர் (பி.எஸ்.பி.) முன்னெடுப்பின் கீழ் சட்டமன்றத் தொகுதிகளுக்கு வழங்கப்பட்ட மானி-யத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதாக இன்று நடைபெற்ற அந்தத் திட்டத்தின் தொடக்க விழாவுக்குப் பின்னர் சிலாங்கூர் கினியிடம் அவர் தெரிவித்தார்.

இந்த மழை நீர் சேகரிப்பு குளத்தில் 2,708 கன மீட்டர் அளவு நீரை சேகரிக்க முடியும். இதன் மூலம் சுற்று வட்டாரத்தில் உள்ள குடியிருப்புகள் மற்றும் தொழிற்பேட்டைகள் எதிர் நோக்கி வரும் வெள்ளப் பிரச்சனைக்குத் தீர்வு காண முடியும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இப்பகுதியில் எதிர்நோக்கி வந்த வெள்ளப் பிரச்சனை தொடர்பாக நில அலுவலகம் மற்றும் வடிகால் நீர் பாசனத் துறையுடன் சந்திப்பு நடத்தப்பட்டது. அங்கு நிலவும் வெள்ளப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கு தடுப்பணை கட்டுவது மற்றும் வெள்ள நீர் சேகரிப்பு குளத்தை நிர்மாணிப்பது ஆகிய இரு திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.

# தமிழ்ப்பள்ளி மாணவர் - பேருந்து கட்டண அரசு மானியம்




**ஷா ஆலம்,** YB வீ. கணபதிராவ் அவர்களின் தலைமையில் சிலாங்கூர் மாநிலச் செயலாளர் அலுவலகத்தில் சிலாங்கூர் மாநில அரசின் தமிழ் பள்ளிகளுக்கான பேருந்து கட்டண மானிய உதவி ஒப்படைப்பு நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழ்ப்பள்ளி நிர்வாகத்தினர், ஆசிரியர்கள், மற்றும் ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பேருந்து கட்டண மானியம் உதவி திட்டம் என்பது மலேசியாவில், சிலாங்கூரில் உள்ள தமிழ் பள்ளிகளுக்கு மட்டுமே மாநில அரசாங்கத்தால் வழங்கப்படும் ஒரு உதவி திட்டமாகும். இத்திட்டம் பெற்றோர் அல்லது பாதுகாவலர் களின் பொருளாதார சுமையைக் குறைக்க உதவுவது மட்டுமின்றி இந்திய மாணவர்களிடம் கல்வியை இடையில் கைவிடும் நிலையை தடுக்கும் நோக்கம் கொண்டது.

பள்ளி பேருந்து கட்டண உதவி திட்டம் என்பது ஒரு வருடாந்திர நிகழ்வு ஆகும். இது பரிவுமிக்க அரசாங்க நிலைக்குழுவின் கீழ் உள்ள முக்கிய திட்டங்களில் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டம் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவதற்கான மாதாந்திர செலவுக்கான சுமையைக் குறைக்க உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என YB வீ. கணபதிராவ் தெரிவித்தார்.

சிலாங்கூர் மாநில அரசின் பரிவுமிக்க நிலைக்குழு மூலம் மாநிலம் முழுவதும் உள்ள தமிழ் பள்ளிகளுக்காக 2023ஆம் ஆண்டுக்கான பேருந்துக் கட்டண மானிய நன்கொடை திட்டத்தின் கீழ் இடம்பெற்றுள்ள 97 பள்ளிகளைச் சேர்ந்த மொத்தம் 3,594 மாணவர்களுக்கு RM1,078,200.00 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

அதுமட்டுமில்லாமல், பள்ளி நிர்வாகம் வழங்கப்படும் மானியத்திற்கான செலவின அறிக்கையை 30 நாட்களுக்குள் மாநில அரசிடம் சமர்ப்பிக்க வேண்டும் என YB வீ. கணபதிராவ் வலியுறுத்தினார். மேலும், இந்த திட்டம் எதிர்வரும் ஆண்டுகளில் தொடரும் என்று தான் நம்புவதாக அவர் தெரிவித்தார்.

## ஒற்றுமை அரசுக்கு ஆதரவளிப்போம்

**ஷா ஆலம்,** நாட்டிலுள்ள ஆறு மாநிலங்களில் விரைவில் நடைபெற-விருக்கும் தேர்தலில் பக்கத்தான் ஹராப்பான் - பாரிசான் நேஷனல் கூட்டணிக்கு இந்திய சமூகம் ஒருமித்த ஆதரவை வழங்க வேண்டும் என சிலாங்கூர் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதிராவ் கேட்டுக் கொண்டார். இனவாத மற்றும் மதவாத தரப்பின-ரிடமிருந்து ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்கு இந்திய சமூகம் தங்களிடையே காணப்படும் அரசியல் கருத்து வேறுபாடுகளையும் பகைமைப் போக்கையும் மறந்து ஒன்று பட்டு ஒரே குடும்பமாக செயல்படுவது அவசியம் என்று அவர் சொன்னார்.

பாஸ் மற்றும் பெர்சத்து ஆகிய கட்சிகள் கடந்தாண்டு தேர்தலின் போது மத, சமய விவகாரங்களை முன்வைத்து செய்த விஷப் பிரசாரங்களை நாம் பார்த்தோம். இதன் விளைவாக அதன் உரியப் பலனை அவர்கள் பெற்றனர். அத்தகைய சூழல் மறுபடியும் ஏற்படா-மலிருக்க விரைவில் ஆறு மாநிலத் தேர்தல்களில் இந்திய சமூகம் பகைமையை ஒதுக்கி தள்ளிவிட்டு ஒருமித்த கருத்துடன் செயல்பட வேண்டும் என அவர் வலியுறுத்தினார். இங்குள்ள மாநில அரசு தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற ஆலயங்-களுக்கு மாநில அரிசின் மானியம் வழங்கும் நிகழ்வுக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நமது மொழி வாழ, தலைமுறை வாழ, சமயம், வாழ, நாம் இந்த நாட்டின் குடிமகனாக வாழ தயவு செய்து வெளியே வாருங்கள். வீம்புக்காக நாம் ஒதுங்கி நின்றாலும் ஓட்டு போட வராவிட்டாலும் கூட யாருக்கு அது சாதகமாக அமையும் என்று உங்களுக்குத் தெரியும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். யார் ஆண்டால் என்ன? எனது ஒரு வாக்கினால் என்ன மாற்றம் ஏற்படப் போகிறது என்று கருதினால் தீவிரவாத போக்குடையத் தரப்பினருக்கு நீங்கள் மறைமுகமாக ஆதரவளித்ததாக ஆகி விடும் என்றும் அவர் எச்சரித்தார்.

சிலாங்கூர், நெகிரி செம்பிலான், பினாங்கு, கெடா ஆகிய மாநிலங்களில் இந்தியர்களின் வாக்கு பலம் கணிச-மான அளவு உள்ளதாக கூறிய கணபதிராவ், பல தொகுதிகளில் வெற்றியைத் தீர்மானிக்கும் இடத்திலும் அவர்கள் உள்ளதாக குறிப்பிட்டார்.

## 72 லட்சம் ரிங்கிட் நிதி ஒதுக்கீடு - மித்ரா




**புத்ராஜெயா** நாட்டில் இந்தியர்கள் அதிகம் உள்ள 72 தொகுதிகளில் செயல்படும் மக்கள் சேவை மையங்களுக்கு 72 லட்சம் ரிங்கிட் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்நிதி வழி மனித மேம்பாடு உட்பட மேலும் பல திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளது மலேசிய இந்திய உருமாற்றப் பிரிவு மித்ராவின் சிறப்பு செயற்குழு தலைவர் டத்தோ ரமணன் ராமகிருஷ்ணன் அறிவித்தார். மித்ராவின் இந்த முயற்சியில் இந்திய மக்களுக்கு பயனளிக்கும் வகையில் தொழில்முனைவோர் மற்றும் தொழில் சமுதாயம் மக்கள் நலன் சமயம் நல்வாழ்வு ஆகிய கூறுகளின் அடிப்படையிலான தேவைகளும் மேம்பாடுகளும் அடங்கும். மித்ராவும் வெஸ்தா ஏவியேசன் சேர்விஸூம் இணைந்து 100 இந்திய இளைஞர்களுக்கு விமானப் போக்குவரத்து துறையில் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 21 மாதங்கள் நடைபெறும் இந்த பயிற்சி திட்டத்தில் 9 மாதங்களுக்கு கல்வி போதனையும் 12 மாதங்களுக்குப் பயிற்சியும் வழங்கப்பட்டு சான்றிதழ் கொடுக்கப்படுவதுடன் வேலைவாய்ப்பு உறுதி செய்யப்படும் என்று ரமணன் கூறினார். மேலும், அந்த நிதி ஒதுக்கீட்டில் ட்ரோன் எனப்படும் ஆளில்லா விமானத்தை இயக்கும் தொழில்நுட்பத் திட்டமும் 527 தமிழ்ப்பள்ளிகளுக்கு 6,000 மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தையும் செயல்படுத்தவுள்ளதாக ரமணன் சுட்டிக்காட்டினார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்கள் சேவை மையத்துடன் இணைந்து ஏற்பாடு செய்திருக்கும் இலக்கிடப்பட்ட சமூகப் பொருளாதார மேம்பாட்டு திட்டம் பேராக் கின்தா, சிலாங்கூர் பெட்டாலிங் மற்றும் ஜொகூர் பாரு ஆகிய பகுதிகளில் மேற்கொள்ள படவிருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் இந்திய மக்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக 2 கோடி ரிங்கிட் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.



# கல்விக் கட்டண உதவித் திட்டத்தில் வெ.76 லட்சம் நிதியுதவி

**ஷா ஆலம்,** உயர் கல்விக் கூடங்களில் பயிலும் மாணவர்களுக்கு உதவ மாநில அரசு கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் 76 லட்சம் வெள்ளி க்கும் அதிகமான தொகையை செலவிட்டுள்ளது.

இந்த சிறப்புத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு வரை குறைந்த வருமானம் பெறும் பி 40 தரப்பைச் சேர்ந்த 1,817 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். உயர் கல்விக் கூடங்களில் பயிலும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவதற்காக பத்தாண்டுகளுக்கு முன்னர் இந்த திட்டம் தொடங்கப்பட்டது. நிதி நெருக்கடி காரணமாக உயர்கல்வி வாய்ப்பை மாணவர்கள் இழந்து விடக்கூடாது என நாங்கள் கருதுகிறோம். இதன் அடிப்படையில் முடிந்த வரை வசதி குறைந்த இந்திய மாணவர்களுக்கு உதவிகளை வழங்கி வருகிறோம்.

டிப்ளோமா கல்வியை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு கூடிய பட்சம் 3,000 வெள்ளியும் பட்டப்படிப்பு மேற்கொள்ளும் மாணவர்களுக்கு கூடிய பட்சம் 5,000 வெள்ளியும் வழங்கப்படுகிறது. இந்த தொகை சம்பந்தப்பட்ட உயர்கல்விக் கூடங்களுக்கு நேரடியாக அனுப்பப்படும்.

இவ்வாண்டுக்கு சுமார் 20 லட்சம் வெள்ளி ஒதுக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் 502 மாணவர்கள் பயன் பெறுவதற்குரிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதன் முதல் கட்ட நிதியளிப்பு மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதி ராவ் தலைமையில் கடந்த சனிக்கிழமை மாநில அரசு தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இளங்கலைப் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் 67 மாணவர்களுக்கு 3 லட்சத்து 13 ஆயிரத்து 474 வெள்ளியும் டிப்ளோமா கல்வியை மேற்கொள்ளும் 109 மாணவர்களுக்கு 2 லட்சத்து 48 ஆயிரத்து 745 வெள்ளியும் மொத்தம் 176 மாணவர்கள் 5 லட்சத்து 62 ஆயிரம் வெள்ளியை பெற்றனர். ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்ட நிதி வழங்கும் நிகழ்வு நடைபெறும் என கணபதிராவ் தமதுரையில் குறிப்பிட்டார்.

# 250 ஆலயங்களின் நிலப் பிரச்சனைக்கு தீர்வு



**ஷா ஆலம்,** சிலாங்கூர் மாநிலத்தில் கடந்த பத்தாண்டுகளில் 250 ஆலயங்களின் நிலப் பிரச்சனைக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக மாநில ஆட்சிக் குழு உறுப்பினர் வீ.கணபதி ராவ் கூறினார்.

இந்த முன்னெடுப்பின் வாயிலாக அரசாங்க நிலங்களில் மட்டுமின்றி தனியார் நிலங்களில் குறிப்பாக தோட்டப்புறங்களில் அமைந்துள்ள ஆலயங்களும் சொந்த நிலத்தை பெறுவதற்குரிய வாய்ப்பு ஏற்பட்டதாக அவர் சொன்னார். இது மிகப்பெரிய சாதனை என வர்ணித்த கணபதி ராவ், நாட்டின் வேறு எந்த மாநிலத்திலும் இந்த அளவுக்கு ஆலய நிலப் பிரச்சனைக்கு தீர்வு காணப்படவில்லை என்றார் அவர்.

கடந்த 2008ஆம் ஆண்டுக்கு முன்னர் ஐந்து ஆலயங்களுக்கு மட்டுமே நில உரிமை பெறப்பட்டதாக நான் அறிகிறேன். 2008ஆம் ஆண்டு டாக்டர் சேவியர் ஜெயக்குமார் ஆட்சிக் குழுவில் இடம் பெற்ற பிறகு 15 ஆலயங்கள் நில உரிமையைப் பெற்றுள்ளன. அதன் பிறகு நான் ஆட்சிக்குழு உறுப்பினராக பொறுப்பேற்ற பத்தாண்டு காலத்தில் 250 ஆலயங்களின் நிலப் பிரச்சனைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். இங்குள்ள மாநில அரசு தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்து ஆலயங்கள் மற்றும் அமைப்புகளுக்கு மானியம் வழங்கும் நிகழ்வுக்கு தலைமை தாங்கிய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். இன்று நடைபெற்ற மூன்றாம் கட்ட நிதியளிப்பு நிகழ்வில் 63 ஆலயங்களுக்கு 810,000வெள்ளி வழங்கப்பட்டது. மேலும் டாக்டர் சேவியர் ஆட்சிக்-குழு உறுப்பினராக இருந்த போது 10லட்சம் வெள்ளியுடன் தொடங்கப்பட்ட இந்த ஆலய மானியம் இவ்வாண்டில் 23 லட்சம் வெள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளதாகவும் அவர் சொன்னார்.

இவ்வாண்டிற்கான மானியத்தில் முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்களில் 905,00 வெள்ளியும் இன்றைய நிகழ்வில் 810,000 வெள்ளியும் ஆலயங்களுக்கு வழங்கப் பட்டுள்ள நிலையில் எஞ்சிய தொகையில் 515,000 வெள்ளி விரைவில் நடைபெற இருக்கும் நான்காம் கட்ட நிதி வழங்கும் நிகழ்வின்போது 53 ஆலயங்களிடம் ஒப்படைக்கப்படும் என்றார் அவர்.

# புளுபிரிண்ட் வறுமை ஒழிப்புத் திட்டம்

## 3,256 பேருக்கு வெ.1.3 கோடி வெள்ளி நிதியுதவி

**கிள்ளான்,** சிலாங்கூர் மாநில அரசு அமல்படுத்தியுள்ள புளுபிரிண்ட் எனப்படும் வறுமை ஒழிப்பு பெருந்-திட்டத்தின் மூலம் கடந்த 2016ஆம் ஆண்டு முதல் இவ்வாண்டு ஜூன் மாதம் வரை 3,256 பேருக்கு 1 கோடியே 35 லட்சத்து 98 ஆயிரத்து 420 வெள்ளி மதிப்புள்ள வர்த்தக உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வசதி குறைந்த தரப்பினரை பொருளாதார ரீதியில் உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு மாநில அரசு அமல் செய்துள்ள அதிக நீதி ஒதுக்கீட்டிலான திட்டம் இதுவாகும் என்று சமூகவியல் துறைக்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதிராவ் கூறினார்.

இவ்வாண்டில் இதுவரை மாநிலத்தின் ஒன்பது மாவட்டங்களைச் சேர்ந்த 334 பேரின் விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ள வேளையில் அவர்களில் கிள்ளான் மாவட்டத்தைச் சேர்ந்த 29 பேருக்கு 355,910 வெள்ளி மதிப்புள்ள வர்த்தக உபகரணங்கள் வழங்கப்பட்டன என்று அவர் சொன்னார்.

இன்று கிள்ளான் மாவட்ட நில மற்றும் மாவட்ட அலுவலகத்தில் புளுரிண்ட் வறுமை ஒழிப்புத் திட்டம் மற்றும் ஐ-சீட் எனப்படும் சிலாங்கூர் இந்திய சமூக மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு இலாகா விண்ணப்பதாரர்களுக்கு வர்த்தக உபகரணங்கள் வழங்கும் நிகழ்வுக்கு தலைமையேற்றப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

மாநில அரசின் இல்திஸாம் சிலாங்கூர் பென்யாயாங் முன்னெடுப்பில் இடம் பெற்றுள்ள திட்டங்களில் ஒன்றாக இந்த புளுபிரிண்ட் வறுமை ஒழிப்பு பெருந்திட்டம் விளங்குகிறது.

குறைந்த வருமானம் பெறும் தரப்பினருக்கு வர்த்தக உபகரணங்களை வழங்குவதன் மூலம் அவர்கள் தங்கள் வர்த்தகத்தை விரிவாக்கம் செய்ய உதவும் நோக்கில் கடந்த 2008ஆம் ஆண்டு முதல் மாநில அரசு இந்த திட்டத்தை அமல்படுத்தி வருகிறது.

# சிலாங்கூரை தக்க வைத்துக் கொள்ள முடியும்

## - அமிருடின் நம்பிக்கை

**ஷா ஆலம்,** வரும் மாநிலத் தேர்தலில் குறைந்த பட்சம் மூன்றில் இரு மடங்கு பெரும்பான்மை இடங்களை பக்கத்தான் ஹராப்பான் மற்றும் ஒற்றுமை அரசாங்கத்தின் கூட்டணிக் கட்சிகள் பெற முடியும் எனத் தாம் நம்புவதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

மாநிலத்திலுள்ள 56 தொகுதிகளில் 50 மேற்பட்ட இடங்களை ஆளும் கூட்டணி கைப்பற்றும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தமது ஐந்தாண்டுக் காலத் தவணையின் ஐந்தாம் ஆண்டு நிறைவையொட்டி நடத்திய சிறப்பு செய்தியாளர் கூட்டத்தில் அவர் தெரிவித்தார்.

வெற்றியைத் தீர்மானிக்கும் துருப்புச் சீட்டாக விளங்குபவர்கள் வாக்காளர்களே. இருந்த போதிலும் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. இதற்கான வியூகங்கள் குறித்து பக்கத்தான் தலைவர்கள் ஒற்றுமை அரசாங்கத்தில் உள்ள கூட்டணிக் கட்சிகளுடன் அடுத்த சில தினங்களில் விவாதிக்கவுள்ளோம் என அவர் சொன்னார்.

புதிய பங்காளிகளுடன் கடந்த 2018ஆம் ஆண்டு அடைவு நிலையை மீண்டும் பிரதிபலிக்க முடியும் என்பதோடு வரும் தேர்தலில் 50க்கும் மேற்பட்ட இடங்களைப் பிடிக்க இயலும் என்று அவர் குறிப்பிட்டார்.

தனது தலைமையிலான நிர்வாகம் கடந்த ஐந்து ஆண்டுகளாக ஆற்றிய சேவைகளின் அடிப்படையில் இந்த நம்பிக்கையை தாம் வெளிப்படுத்துவதாகச் சுங்கை துவா சட்டமன்ற உறுப்பினருமான அவர் தெரிவித்தார்.

கோவிட்-19 பெருந்தொற்றின் விளைவாக ஏற்பட்ட பொருளாதார, அரசியல் மற்றும் சமூக நெருக்கடிகள் தொடங்கி கடந்த 2020ஆம் ஆண்டில் மத்திய ஹராப்பான் அரசு கவிழ்-வதற்குக் காரணமான ஷெரட்டோன் நகர்வு உள்பட பலவிதமான சவால்களை நாம் எதிர்கொண்டு சமாளித்துள்ளோம் என்றார் அவர்.



நாம் எதிர்கொண்ட பல்வேறு பிரச்சனைகளை மூடி மறைக்காமல் அவற்றுக்குத் தீர்வு கண்ட நமது அரசின் திறன்மிக்க நிர்வாக அடைவு நிலையின் அடிப்படையில் வெற்றிக்கான சாவுத்தியம் மீது நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம் என அவர் சொன்னார்



# சாலைகள், வடிகால்களைத் தரம் உயர்த்த மாநில அரசு வெ.2.1 கோடி மானியம்

**ஷா ஆலம்,** ஷா ஆலம் மாநகர் மன்றத்திற்குட்பட்ட பகுதிகளில் சாலைகள் மற்றும் வடிகால்களைத் தரம் உயர்த்த மாநில அரசு 2 கோடியே 10 லட்சம் வெள்ளியை ஒதுக்கீடு செய்துள்ளது.

அந்த நிதி ஒதுக்கீட்டில் 1 கோடியே 15 லட்சம் வெள்ளி மாநகர் மன்றத்தின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதியில் உள்ள 1,600 கிலோ மீட்டர் சாலைகளை மேம்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் என்று ஷா ஆலம் டத்தோ பண்டார் கூறினார்.

மேலும் 50 லட்சம் வெள்ளி சாலை விளக்குகளுக்கான மின் இணைப்பு கேபிள்களை மாற்றுவதற்கும் 10 லட்சம் வெள்ளி கால்வாய்களைச் சுத்தம் செய்வதற்கும் பயன்படுத்தப்படும் என்று டாக்டர் நோர் புவாட் ஹமிட் கூறினார்.

மாரிஸ் எனப்படும் மலேசிய சாலை தகவல் தரவு முறையின் வாயிலாக அந்த 2 கோடியே 10 லட்சம் வெள்ளி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறிய அவர், நேற்று வழங்கப்பட்ட பணி ஒப்பந்த கடிதங்களைப் பெற்ற குத்தகையாளர்கள் சம்பந்தப்பட்ட மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வர் என்றார்.

நேற்று இங்குள்ள விஸ்மா எம்.பி.எஸ்.ஏ.வில் நடைபெற்ற குத்தகையாளர்களுக்கு டெண்டர் ஒப்பந்த கடிதங்களை வழங்கும் நிகழ்வு மற்றும் மலேசிய ஊழல் தடுப்பு ஆணையத்துடன் கலந்துரையாடலில் கலந்து கொண்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கு 31 குத்தகையாளர்களுக்குப் பணி ஒப்பந்த கடிதம் வழங்கப்பட்டுள்ளதாக டாக்டர் நோர் புவாட் கூறினர்.

# வெள்ளை அடிக்கும் பணி மாநிலத் தேர்தலுக்குப் பிறகும் தொடரும்



**பெட்டாலிங் ஜெயா,** மக்கள் குடியிருப்புத் திட்டமான (பிபிஆர்) 'லெம்பா சுபாங் ' வெள்ளை அடிக்கும் பணி மாநிலத் தேர்தலுக்குப் பிறகும் (பிஆர்என்) தொடரும்.

"சில மாதங்களுக்கு முன்பு பெட்டாலிங் ஜெயா நாடாளுமன்ற உறுப்பினர் லீ சீன் சுங் மற்றும் உள்ளூராட்சி மேம்பாட்டு அமைச்சகம் (கேபிகேடி) ஆகியோ-ருடனான சந்திப்பு மற்றும் பல கலந்துரையாடல்கள் விளைவாக 'லெம்பா சுபாங் 1 மற்றும் 2 ' இல் ஏற்பட்ட பிரச்சினைகளை தீர்க்க எங்களுக்கு சாதகமான பதில் கிடைத்தது.

ஸ்ரீ செத்தியா மாநில சட்டமன்ற உறுப்பினர் (ADN), குறைந்த வருமானம் பெறும் பிரிவினருக்கான இக்குடியிருப்பு பகுதியில் வெளிநாட்டினர் மற்றும் வசதியானவர்களும் வசிப்பதே இந்நடவடிக்கைகுக் காரணமாகும் என்றார்.

"கேபிகேடி துணை அமைச்சர் அக்மல் நஸ்ருல்லா முகமட் நசீர் இந்த வெள்ளிக்கிழமை சுபாங் பள்ளத்தாக்குக்கு வரவுள்ளார். இதன் மூலம் பல பிரச்சனைகளைத் தீர்க்க முடியும் என்று நான் நம்புகிறேன்" என்று ஹலிமி அபு பக்கர் கூறினார்.

ஸ்ரீ செத்தியா தொகுதியை இரண்டாவது முறையாகத் தக்க வைப்பதில் வெற்றி பெற்றால், சுபாங் பள்ளத்தாக்கு 1 மற்றும் 2 இல் உள்ள சில சிக்கல்களைத் தீர்க்க கேபிகேடி தொடர்ந்து உதவும் என்பது அவரது நம்பிக்கை தெரிவித்தார்.

"குடியேற்றம் மற்றும் உள்கட்டமைப்பு போன்ற பிரச்சனைகளை தீர்ப்பது இதில் அடங்கும். இதை செயல்படுத்த உள்ளூர் அதிகாரிகள் (PBT) உட்பட பல தரப்பினரின் உறுதியான ஒத்துழைப்பு தேவைப்படுகிறது, என்றும் அவை தொடர்ந்து கண்காணித்து வரும் என்று அவர் தெரிவித்தார்.




# புயலால் சேதமடைந்த மோரிப் தேசியப் பள்ளிக்கு RM20,000 நன்கொடை

**ஷா ஆலம்,** புயலால் சேதமடைந்த கூரையைச் சரிசெய்வதற்காக மோரிப் தேசியப் பள்ளிக்கு உடனடியாக RM20,000 த்தை நன்கொடையாக சிலாங்கூர் மந்திரி புசார் (கட்டமைப்பு) அல்லது எம் பி ஐ வழங்கியது.

ஜூன் 15 அன்று ஏற்பட்ட புயலால் பள்ளி மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டது என்று எம்பிஐ சமூகப் பொறுப்பு மற்றும் கார்ப்பரேட் கம்யூனிகேஷன்ஸ் தலைவர் அஹ்மத் அஸ்ரி ஜைனல் நோர் கூறினார்.

"கடந்த வியாழன் அன்று, மோரிப் பிரதிநிதி ஹஸ்னுல் பஹாருடினுடன் நான் இந்தப் பள்ளிக்குச் சென்றேன். இந்தப் பள்ளிதான் புயலால் அதிகம் பாதிக்கப்பட்டது.

"பள்ளியின் மேற்கூரையைச் சரி செய்ய எம்.பி.ஐ ஏற்கனவே RM20,000 நன்கொடையாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளது," என்று அவர் இன்று முகநூலில் தெரிவித்தார்.

இந்த நன்கொடையை அஹ்மத் அஸ்ரி இன்று பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத்திடம் (PIBG) வழங்கினார். அதற்கு கல்வி அமைச்சர் ஃபத்லினா சிடேக் சாட்சியாக இருந்தார்.

அதே நேரத்தில், பாதிக்கப்பட்ட உள்கட்டமைப்பை சரிசெய்ய சம்பந்தப்பட்ட பள்ளிக்கு உதவ RM150,000 ஒதுக்கப்படும் என்றும் அஹ்மட் அஸ்ரி தெரிவித்தார்.

"மாநிலக் கல்வி இயக்குநர் டாக்டர் ஜாஃப்ரி அபு தெரிவித்தபடி சிலாங்கூர் மாநில கல்வித் துறையிலிருந்து கூடுதலாக RM20,000 வழங்கப்படும்" என்றும் அவர் கூறினார்.

# மோரிப் கடற்கரை போல் கிளானாங் கடற்கரையை புகழ் பெறச் செய்ய திட்டம்



**ஷா ஆலம்**, பந்திங்கில் உள்ள கிளானாங் கடற்கரையைச் சிலாங்கூரில் உள்ள மோரிப் கடற்கரை போல் புகழ்பெற்ற பொழுதுபோக்குப் பகுதியாக மாற்ற மாநில அரசு திட்டமிட்டுள்ளது.

வார இறுதி நாட்களில் பள்ளி விடுமுறை நாட்களிலும் ஓய்வெடுக்கும் வகையில் சுற்றுலாத் தளம் குடும்ப பொழுதுபோக்கு இடமாக விளங்குகிறது என மோரிப் மாநிலச் சட்டமன்ற உறுப்பினர் (ஏடிஎன்) ஹஸ்னுல் பஹாருடின் கூறினார்.

கிளானாங் கடற்கரையை உணவு வளாகங்கள் , சுராவ், பொது கழிப்பறைகள், வாகன நிறுத்துமிடங்கள் மற்றும் குழந்தைகள் விளையாட்டு மைதானங்கள் போன்ற பல்வேறு பொது வசதிகளுடன் பொதுமக்களுக்கு ஏற்றதாக மாற்றுவதற்கு மாநில அரசின் ஆதரவு பங்களிக்கிறது.

கடந்த சனிக்கிழமையன்று கிளானாங் கடற்கரை திருவிழாவின் நிறைவு விழாவில் அவர் இவ்வாறு கூறினார்.

உள்ளூர்வாசிகள் மற்றும் பொது மக்களின் ஈடுபாடு இல்லாமல் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டமிடல் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு களை அடைய முடியாது என்று ஹஸ்னுல் மேலும் கூறினார்.

"உள்ளூர்வாசிகளின் தீவிர ஈடுபாடும் அர்ப்பணிப்பும் இன்னும் வலுவாக இருப்பதை நான் காண்கிறேன், இது இந்தப் பகுதி எப்போதும் சுத்தமாகவும், பாதுகாப்பாகவும் இருப்பதை உறுதி செய்கிறது என்று அவர் கூறினார்.

# தமிழ்ப்பள்ளிகளின் வளர்ச்சியில் சிலாங்கூர் அரசின் அளப்பரிய பங்கு

செய்தி : ரா. ராஜா



**கிள்ளான்,** நாட்டில் இந்தியர்கள் அதிகம் வசிக்கும் மாநிலம் சிலாங்கூர் ஆகும். தமிழ்ப் பள்ளிகளுக்குப் பிள்ளைகளை அனுப்புவதில் பெற்றோர்கள் காட்டும் அலட்சியம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் தமிழ்ப்பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை சரிவு கண்டு வந்த போதிலும் இம்மாநிலத்தைப் பொறுத்த வரை சுமார் 26,400 மாணவர்களுடன் 100 பள்ளிகள் இன்னும் உயிர்ப்புடன் செயல்பட்டு வருகின்றன.

சுதந்திரத்திற்கு முன்னர் பெரும்பாலான பள்ளிகள் தோட்டப்புறங்களில் வீற்றிருந்த வேளையில் காலப் போக்கில் தோட்டப்புறங்கள் நகரமயமாதல் அங்கிருந்து பள்ளிகளும் வேறு வழியின்றி நகர்ப்புற வளையத்தில் தவிர்க்க இயலாமல் சிக்க வேண்டியதாயிற்று.

அடிப்படை வசதிகள் என்று பார்த்தால் தோட்டப்புறம், நகர்ப்புறம் என்ற வேறுபாடின்றி மாநிலத்திலுள்ள பெரும்பாலான பள்ளிகள் பின்தங்கிய நிலையில் தான் இன்றளவும் காணப்படுகின்றன. மத்திய அரசின் மானியமும் பாலைவனத்து மழை போல் எப்போதோ ஒரு முறை கிடைக்க அதனைக் கொண்டு அடுத்த கட்டத்திற்கு நகர முடியாமல் தமிழ்ப் பள்ளிகள் தத்தளித்து வந்தன.

## தமிழ் பள்ளிகளுக்கு மானியம்

இத்தகைய சூழலில்தான் கடந்த 2008ஆம் ஆண்டு நாட்டு அரசியலில் பெரும் பிரளயம் ஏற்பட்டு மாநிலத்தில் ஆட்சி மாற்றம் உண்டானது. டான்ஸ்ரீ காலிட் இப்ராஹிம் தலைமையில் பக்காத்தான் ராக்யாட் அரசு சிலாங்கூர் மாநிலத்தில் ஆட்சியை அமைத்தது. அப்போது மாநில ஆட்சிக் குழுவில் இடம் பெற்ற டாக்டர் சேவியர் ஜெயக்குமார் முன்வைத்த வலுவான கோரிக்கையின் பயனாக மாநில வரலாற்றில் முதன் முறையாக தமிழ்ப் பள்ளிகளுக்கு வருடாந்திர மானியமாக 30 லட்சம் வெள்ளி ஒதுக்கப் பட்டதுடன், பல முற்போக்கான திட்டங்களுடன் வளர்ச்சி முன்னெடுக்கப்பட்டது.




இந்த நிதியைக் கொண்டு அப்போது மாநிலத்தில் இருந்த 97 தமிழ்ப் பள்ளிகளில் கற்றல் கற்பித்தலை மேம்படுத்தும் முயற்சிகளும் பள்ளிகளில் அடிப்படை வசதிகளை தரம் உயர்த்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

## பள்ளிகளை இணைப்பது அல்லது இழப்பதை தவிர்க்க வழி

அதே வேளையில் தமிழ்ப்பள்ளி மாணவர்கள் தகவல் தொழில்நுட்ப ஆற்றலைப் பெறுவதில் பின்தங்கி விடக்கூடாது என்பதற்காக பள்ளிகளில் கணினி மையம் அமைக்கும் பணியும் முடுக்கி விடப் பட்டது. இது தவிர, மலேசிய தமிழ் அறவா-ரியம் மற்றும் சைல்டு போன்ற தன்னார்வ அமைப்புகளுடன் இணைந்து பாலர் பள்ளித் திட்டத்தையும் மாநில அரசு அமல்படுத்தியது. மிக முக்கியமாக தமிழ்ப்பள்ளிகளை ஆவணப்படுத்தும் முன்-முயற்சியும் எடுத்துக் கொண்டார். டாக்டர் சேவியர் அதனால், சிலாங்கூர் தமிழ்ப்பள்ளிகளின் தோற்றம் முதல் எதிர்கால நில தேவைகள் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் இந்தியர்களின் குடியிருப்புகள் குறித்து ஆய்வு நடத்தி , அந்த குறிப்புகள் பள்ளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவை நாட்டிலுள்ள எல்லா தமிழ்ப்பள்ளிகள் குறித்தும் மேற்கொண்டால், மாணவர்கள் குறைவு காரணமாக பள்ளிகளை இணைப்பதோ அல்லது இழப்பதையோ தவிர்க்கலாம். அந்த ஆய்வின் பயனாக, 2012-2013ம் ஆண்டுகளில் 20 தமிழ்ப்பள்ளிகளின் நிலத்துக்கு மாநில அரசாங்கத்தின் அங்கீகாரம் கோரப்பட்டது.

## மானியம் 50 லட்சம் வெள்ளியாக உயர்த்தப்பட்டது

கடந்த 2013ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பின்னர் புதிதாக ஆட்சிக்குழுவில் இடம் பெற்ற வீ.கணபதிராவ் மேற்கொண்ட முயற்சியால் தமிழ்ப்பள்ளிகளுக்கான மானியம் 50 லட்சம் வெள்ளியாக உயர்த்தப்பட்டது. இந்த மானியத்தின் வழி மாநிலத்திலுள்ள அனைத்து தமிழ்ப்பள்ளிகளிலும் கல்வி மற்றும் அடிப்படை வசதிகள் ரீதியாக அபரிமித வளர்ச்சியைக் காண தொடங்கின. இது தவிர, கணபதி ராவ் முயற்சியில் கடந்த பத்தாண்டுகளில் 19 தமிழ்ப்பள்ளிகளுக்கு நில உரிமையும் பெற்றுத் தரப்பட்டுள்ளது.

மாநில அரசு வழங்கிய மானியத்தின் வழி மாணவர்களுக்கு தேர்வு வழிகாட்டிப் புத்தகங்களை விநியோகிக்கவும் பிரத்தியேக வகுப்புகளை நடத்தவும் பெற்றோர் ஆசிரியர் சங்கங்களுக்கு வாய்ப்பு கிட்டியது. இந்த முன்னெடுப்புகளின் பயனாக யு.பி.எஸ்.ஆர். தேர்வுகளில் மாநிலத்தில் உள்ள தமிழ்ப்பள்ளி மாணவர்களின் தேர்ச்சி விகிதமும் அதிகரித்தது.

## யு.பி.எஸ்.ஆர். மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு

தமிழ்ப்பள்ளிகளின் வளர்ச்சியில் மாநில அரசின் பங்களிப்பு அத்துடன் நிற்கவில்லை. யு.பி.எஸ்.ஆர். தேர்வில் தேர்வில் சிறப்பான மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் சிறப்பு விருதளிப்பு நிகழ்வையும் மாநில அரசு ஏற்பாடு செய்தது.

அந்த ஆறாம் ஆண்டுத் தேர்வில் 8ஏ பெற்ற மாணவர் களுக்கு 200 வெள்ளியும் 7ஏ பெற்ற மாணவர்களுக்கு 150 வெள்ளியும் 6ஏ பெற்ற மாணவர்களுக்கு 100 வெள்ளியும் வெகுமதியாக வழங்கப்பட்டது. அதோடு மட்டுமின்றி அத்தேர்வில் சிறப்பான அடைவு நிலையை பதிவு செய்த முதல் மூன்று பள்ளிகளுக்கு முறையே 10,000 வெள்ளி, 6,000 வெள்ளி மற்றும் 4,000 வெள்ளி பரிசாக வழங்கப்பட்ட அதே வேளையில் ஆசிரியர் பணியை சிறப்பாக ஆற்றிய ஆசிரியர்களும் தோக்கோ குரு விருது வழங்கி கௌரவிக்கப் பட்டனர். யு.பி.எஸ்.ஆர். மாணவர்களை கௌரவிக்கும் ,இந்த நிகழ்வு கடந்த 2009 ஆம் ஆண்டு தொடங்கி கடந்த 2021ஆம் ஆண்டில் அத்தேர்வை அரசாங்கம் முடிவுக்கு கொண்டு வரும் வரை நடத்தப்பட்டது

## தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்கு பேருந்து கட்டண உதவி

தோட்டப்புற மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பெற்றோர்களின் ஏழ்மை ஒருபோதும் காரணமாகி விடக்கூடாது என்பதில் மாநில அரசு உறுதியாக உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு தோட்டப்புற பள்ளி மாணவர்களுக்காக இலவச பேருந்து கட்டணத் திட்டத்தை அது அமல்படுத்தியுள்ளது. இது முதன் முதலில் மாநிலத்தின் மிக ஒதுக்குப்புறமான இடத்தில் உள்ள சுங்கை திங்கி மற்றும் நைக்கல் கார்டன் தோட்டப் பிள்ளைகள் பள்ளி செல்ல வழங்கப்பட்டது. இத்திட்டத்தில் பங்கு பெறும் மாணவர்களுக்கு மாதம் 30 வெள்ளி வீதம் 10 மாதங்களுக்கு 300 வெள்ளி பேருந்து கட்டணமாக வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ் கடந்தாண்டில் 3,260 மாணவர்கள் பயனடைந்தனர். மாதம் 2,000 வெள்ளிக்கும் குறைவாக வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

## இந்திய மாணவர் உயர்கல்விக் கட்டண உதவித் திட்டம்



இந்திய சமூகத்திற்காக மாநில அரசு அமல்படுத்திய பிரத்தியேக திட்டங்களில் ஒன்றாக இந்திய உயர்கல்வி கூட மாணவர்களுக்கான கல்வி கட்டண உதவித் திட்டம் விளங்குகிறது. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் உயர்கல்வி பெறுவதில் எதிர்நோக்கும் சிரமங்களைக் களையும் நோக்கில் இந்த திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் வழி டிப்ளோமா கல்வியை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு கூடிய பட்சம் 3,000 வெள்ளியும் பட்டப் படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு கூடிய பட்சம் 5,000 வெள்ளியும் வழங்கப்படுகிறது. மாதம் 2,000 வெள்ளிக்கும் குறைவாக வருமானம் பெறும் குடும்பங்களை இலக்காக கொண்ட இந்த திட்டத்திற்கு மாநில அரசு 25 லட்சம் வெள்ளியை ஒதுக்கீடு செய்துள்ளது. தொடக்கத்தில் 14 ஆக இருந்த இந்த திட்டத்தின் வழி உதவி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை தற்போது 560 ஆக உயர்ந்துள்ளது.

தொடர்ச்சி பக்கம் 12 >>



ஆலம், மிட்லண்ட்ஸ் தோட்ட தமிழ்ப் பள்ளியில் மாணவர் தங்கும் விடுதி கட்டப்பட்டுள்ளது. நான்கு

## மிட்லண்ட்ஸ் தமிழ்ப்பள்ளி

சிலாங்கூரில் தமிழ்ப்பள்ளிகளின் வளர்ச்சியில் மேலும் ஒரு மைல்கல்லாக ஷா ஆலம், செக்சன் 7 இல் அமைந்துள்ள மிட்லண்ட்ஸ் தோட்ட தமிழ்ப்பள்ளி விளங்குகிறது. கடந்த 2012 ஆம் ஆண்டில் அப்போதைய ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் சேவியர் ஜெயக்குமாரின் முயற்சியில் இந்த பள்ளி நிர்மாணிப்புத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மொத்தம் 24 வகுப்பறைகளை கொண்டுள்ள இந்த அதிநவீன பள்ளி மாநில அரசின் 30 லட்சம் வெள்ளி மானியத்துடன் நிர்மாணிக்கப்பட்டது. சுமார் 17 லட்சம் வெள்ளி செலவில் 1,000 பேர் அமரக்கூடிய மாநாட்டு மையமும் இப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ளது என்படன் இதன் கூடுதல் சிறப்பு.

## மிட்லண்ட்ஸ் தமிழ்ப்பள்ளி மாணவர் தங்கும் விடுதி

வசதி குறைந்த மாணவர்கள் தங்கி கல்வி பயில்வதற்கு ஏதுவாக ஷா

மாடிகளைக் கொண்ட இந்த தங்கும் விடுதியை கட்டுவதற்கு உண்டான செலவையும் மாநில அரசே ஏற்றுக் கொண்டது. இந்த தங்கும் விடுதியில் 200 மாணவர்கள் வரை தங்கி படிப்பதற்கான வசதி உள்ளது.

தொடக்கத்தில் 100 மாணவர்களுடன் இந்த தங்கும் விடுதி செயல் படவுள்ளது. இந்த மாணவர் தங்கும் விடுதியை பராமரிப்பதற்கு ஆண்டுக்கு 11 லட்சம் வெள்ளி வரை செலவு பிடிக்கும் என மதிப்பிடப்படுகிறது.

தமிழ் பள்ளிகளுக்கு இந்நாட்டில் .200 ஆண்டுகால வரலாறு இருந்தாலும், காரியமாற்ற சிந்தை உள்ளவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தால், அவர்கள் தமிழ்ப்பள்ளிகள் மீது அக்கறை கொண்ட அரசு சாரா அமைப்புகளும் சேர்ந்து பணியாற்றினால் நம் பள்ளிகளின் எதிர்காலம் ஏற்றமிகு காலமாகவே அமையும் என்பதற்கு சான்று சிலாங்கூர் தமிழ்ப்பள்ளிகள்.

# சிலாங்கூர்
# நாட்டின் பொருளாதாரச் சக்தி



**ஷா ஆலம்,** நாட்டின் பொருளாதார உந்து சக்தியாகச் சிலாங்கூர் தொடர்ந்து விளங்கி வருகிறது என்பதற்கு 2023 சிலாங்கூர் மெகா வேலை வாய்ப்பு கண்காட்சியின் வெற்றி சிறந்த சான்றாக விளங்குகிறது.

இந்த வேலை கண்காட்சி சிலாங்கூர் மாநில மக்களுக்கு மட்டுமின்றி வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கும் பயன் தந்து-ள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

இந்த வேலை வாய்ப்புச் சந்தையில் உள்ளூர்வாசிகள் மட்டும் பங்கு கொள்ளவில்லை. மாறாக, இங்கு குடிபெயர்ந்தவர்களும் இதில் கலந்து கொண்டனர். பொருளாதார உந்து சக்தி என்பதை இது அங்கீகரிக்கிறது என்றார் அவர்.

இத்தகைய வேலை வாய்ப்புச் சந்தைகளை நடத்துவதன் மூலம் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு-களை வழங்கும் அதே வேளையில் புதிய வேலை வாய்ப்புகளையும் உருவாக்குகிறோம் என்று அவர் மேலும் சொன்னார்.


இங்குள்ள ஷா ஆலம் மாநகர் மன்ற மாநாட்டு மையத்தில் நேற்று நடை-பெற்ற வேலை வாய்ப்பு கண்காட்சியை நிறைவு செய்து வைத்து உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாநிலத்தில் வேலையின்மை விகிதம் சரிவு கண்டுள்ளதை குறிப்பிடத்தக்க சாதனை என வர்ணித்த அமிருடின், பொருளாதார அமைப்புகளின் அடிப்படையில் சிலாங்கூர் ஆக்ககரமான மாநிலமாக விளங்குவதை பிரதிபலிக்கிறது என்றார்.

இந்த மெகா வேலை வாய்ப்புச் சந்தையில் சேவை, வாகனம், உபசரணை, சுற்றுலா உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கு கொண்டன.





## மாநிலத்தின் பொருளாதார செயல்திறன்




| | வரி மூலம் வரவு | வரி அற்ற வருமானம் | இதர வரவு |
|---|---|---|---|
| 2020 | 654,540,000.00 | 1,006,000,000.00 | 282,460,000.00 |
| 2021 | 700,710,000.00 | 1,338,440,000.00 | 281,020,000.00 |
| 2022 | 605,571,629.22 | 1,275,861,318.21 | 218,848,614,.09 |
| 2023 | 684,360,000.00 | 1,31,780,000.00 | 228,520,000.00 |

## தேசிய உற்பத்தியில் சிலாங்கூரின் பங்களிப்பு




**6.52 மில்லியன்**
சிலாங்கூர் மக்கள் தொகை

**24.8%**
தேசிய உற்பத்தியில் 1/4 பகுதி

**32%**
தேசிய தொழிற் துறையில் அதிக பங்களிப்பு

**26%**
தேசிய சேவைத் துறையில் அதிக பங்களிப்பு

# ரிங்கிட் மலேசியா மதிப்பிழப்பு
## சிக்கலை சமாளிக்கும் முயற்சி

**நீலாய்,** ரிங்கிட் மலேசியா மதிப்பிழந்து வரும் சிக்கலை சமாளிக்கும் முயற்சியில், நாட்டின் வட்டி விகிதங்களால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தங்கள் பணத்தை நாட்டை விட்டு வெளியே எடுத்துச் செல்லாமல் இருக்க அரசாங்கம் சமநிலையை அடைய முயல்கிறது என்று டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார். ரிங்கிட் வீழ்ச்சியானது நாட்டின் குறைந்த வட்டி விகிதங்கள் உடன் தொடர்புடையது என்றும், அரசாங்கம் வட்டி விகிதங்களை மிக அதிகமாக உயர்த்தினால், அது சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு சுமையாக இருக்கும் என்றும் பிரதமர் கூறினார்.

"என்னிடம் RM1 மில்லியன் இருந்தால், அதை வங்கியில் போட விரும்புகிறேன். இச்சூழலில் மலேசியா, சிங்கப்பூர் மற்றும் இந்தோனேசியா என்ற தேர்வு உள்ளது. சிங்கப்பூர் மற்றும் இந்தோனேசியாவில் அதிக வட்டி விகிதங்கள் உள்ளன என்று குறிப்பிட்டார்.

"எனவே, அப்பணத்தை இந்தோனேசியா மற்றும் சிங்கப்பூரில் சேமிக்க தேர்வு செய்கிறேன். இதுதான் இப்போது எங்களின் பிரச்சனை," என்று அவர் யுனிவர்சிட்டி சைன்ஸ் இஸ்லாம் மலேசியாவில் (யுஎஸ்ஐஎம்) அன்வாரை சந்திப்போம் (தெமு அன்வார்) நெகிரி செம்பிலான் நிகழ்ச்சியின் போது கூறினார்.

அட்ரியானா என்ற படிவம் ஆறு மாணவியின் கேள்விக்கு அன்வார் பதிலளித்தார், அம்மாணவி நாட்டின் நாணயத்தை வலுப்படுத்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கிறது என்பதை அறிய விரும்பினார். நிதி அமைச்சராகவும் இருக்கும் அன்வார், ரிங்கிட் சரிவை எதிர்கொண்டாலும், நாட்டின் பொருளாதார வளர்ச்சி இந்த ஆண்டின் முதல் காலாண்டில் சிங்கப்பூர், இந்தோனேசியா மற்றும் சீனாவை மிஞ்சும் அளவிற்கு தொடர்ந்து உயர்ந்து வருகிறது என்றார்.

"ரிங்கிட் மதிப்பு சரிவு, குறைந்த முதலீடு மற்றும் குறைந்த வளர்ச்சியால் நமது பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்திருந்தால் வேறு விதமாக இருந்திருக்கும். ஆனால் அப்படி நடக்கவில்லை. எங்கள் முதலீடு முதல் நான்கு மாதங்களில் RM 71 பில்லியனாக உள்ளது. பல சலுகைகளுடன் முதலீடுகளை திரும்ப கொண்டு வருவதற்கான வழிகளை நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

"ஜொகூரில் நிதி மையத்தை அமைப்பது ஒரு வழி என்று நான் கூறுகிறேன். மேலும்- பலவற்றை கடந்த வாரம் நான் அறிவித்தேன். அதுமட்டுமில்லாமல், இன்னும் பல நடவடிக்கைகளை நாங்கள் யோசித்து வருகிறோம்," என்று அவர் கூறினார்.



எவ்வாறாயினும், நாட்டிற்கு அதிக முதலீடுகளை ஈர்ப்பது எளிதானது அல்ல என்று அன்வார் ஒப்புக்கொண்டார். ஏனெனில் இந்த ஆகஸ்ட் மாதம் அரசாங்கத்தில் மாற்றம் ஏற்படக்கூடும் என்ற வதந்திகளால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இன்னும் நம் நாட்டில் உறுதியற்ற தன்மை நிகழ்வதாக நம்புகின்றனர்.

## பொருளாதாரத்தை உயர்த்த ஒரே குழுவாகச் செயல்பட வேண்டும்

**கோலாலம்பூர்,** பன்னிரண்டாவது மலேசியத் திட்டத்தின் மத்திய தவணைக்கான மறு ஆய்வு மீதானக் கூட்டத்திற்குப் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் தலைமை தாங்கினார். புத்ரா ஜெயாவில் நேற்று நடைபெற்ற இந்த சிறப்பு கூட்டத்தில் அனைத்து அமைச்சர்களும் அமைச்சுகளின் தலைமைச் செயலாளர்களும் கலந்து கொண்டனர். திட்டமிடப்பட்ட சமூகப் பொருளாதார திட்டங்கள் மற்றும் முன்னெடுப்புகள் விரைவாக அமலாக்கம் காண்பதற்கு ஏதுவாக அனைவரும் ஒரே குழுவாக செயல்பட வேண்டும் என இந்த கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

நடப்பு சமூகப் பொருளாதார மாற்றங்கள் மற்றும் சவால்களைக் கருத்தில் கொண்டு மக்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதில் அரசாங்கம் முழு அக்கறை செலுத்தி வருவதை பன்னிரண்டாவது மலேசியத் திட்டத்தின் மத்திய தவணைக்கான மறு ஆய்வு புலப்படுத்த வேண்டும் என்று நிதியமைச்சருமான அன்வார் கேட்டுக் கொண்டார்.

மத்திய தவணைக்கான மறு ஆய்வை தயார் செய்வதில் அனைத்து அமைச்சர்களின் கருத்துகளும் கவனத்தில் கொள்ளப்படும் என்று அவர் தனது முகநூல் பதிவில் தெரிவித்தார்.

கொள்கை அமலாக்க விவகாரங்களில் குறிப்பாக, மக்கள் நலன் சார்ந்த அம்சங்களில் அனைத்து அமைச்சர்களும் ஆக்ககரமாகவும் தீவிரமாகவும் செயல்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். பன்னிரெண்டாவது மலேசியத் திட்டத்தின் மத்திய தவணைக்கான மறு ஆய்வில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இலக்குகளை குறித்து விவாதிப்பதற்காக இந்த சிறப்பு கூட்டம் நடத்தப்பட்டதாகப் பிரதமர் குறிப்பிட்டார்.

# ஆறாம் படிவம் - கல்வியானது சுதந்திரமாக இருத்தல் வேண்டும்

**நீலாய்,** நீலாய், நாட்டில் உள்ள ஆறாம் படிவ கல்வியானது அவை பள்ளி மைதானத்தில் நடத்தப்பட்டாலும், அவை முழுக்க பள்ளி விதிகளுக்குக் கட்டுப்படாமல், சிறிது தளர்வுக்கு இடம் கொடுக்க வேண்டும். பள்ளி அமர்வுகள் படிவம் ஐந்தில் முடிவடைவதால், காலத்திற்கு ஏற்ப படிவம் ஆறின் சூழல் மாற்றப்பட வேண்டும்.

"படிவம் ஆறின் கலாச்சாரம் மற்றும் சுற்றுச்சூழலை மாற்ற வேண்டும் எனும் கருத்தைக் கல்வி அமைச்சர் ஃபத்லினா சிடேக்கிடம் நான் கொண்டு செல்வேன் என்று யுனிவர்சிட்டி சைன்ஸ் இஸ்லாம் மலேசியாவில் (யுஎஸ்ஐஎம்) நடைபெற்ற நிகழ்வில் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம். கூறினார்.

பல ஆறாம் படிவ மாணவர்கள் விதிகள் மற்றும் முறைகள் குறித்து புகார் அளித்துள்ளனர், மேலும் முந்தைய உரையாடல் அமர்வுகளின் போது அதை மாற்றுமாறும் வலியுறுத்தி உள்ளனர். படிவம் ஆறாம் பாடத்திட்டத்தை செமஸ்டர் முறைக்கு மாற்றுவதற்கான பரிந்துரைகள் குறித்து, கல்வி வல்லுநர்கள், ஆசிரியர்கள் மாணவர்களுடன் விவாதிக்க வேண்டும் என்றார்.

### வேலையின்மை குறைக்க பாடத்திட்டத்தில் மாற்றம் தேவை

மலேசியா ஒரு முதல் தர நாடாக இருக்க விரும்பினால், தற்போதைய மாற்றங்களுக்கு ஏற்ப டிஜிட்டல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் இன்டர்நெட் ஆஃப் திங்ஸ் (IoT) போன்ற புதிய அறிவு அடிப்படையிலான பாடத்திட்டங்களை விரைவாக மாற்றியமைக்க வேண்டும் என பிரதமர் வலியுறுத்தினார். கூடுதலாக, வேலையின்மை விகிதங்களை குறைக்க பழைய பாடத்திட்டத்தில் பொருத்த-மின்மை மற்றும் அதிகப்படியான சார்பு இல்லாமல் இருக்க தொழில்துறை பயிற்சி தேவைப்படுகிறது.

"அதனால்தான் பெட்ரோனாஸ் இப்போது பத்து ராகிட், கிமானிஸ் மற்றும் பெங்கராங் ஆகிய இடங்களில் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி பயிற்சி (TVET) திட்டங்களில் ஈடுபட்டுள்ளது. மேலும், புரோட்டான் பெக்கானில் உள்ள டிவிஇடி மற்றும் பல பெரிய நிறுவனங்களைக் கையகப் படுத்தியுள்ளது" என்று அவர் கூறினார்.

உள்ளூர் பட்டதாரிகள் அசாதாரண திறன்களைக் கொண்டு உள்ளனர், எனவே தொழில்துறை தேவைகளுக்கு ஏற்ப அவர்களின் திறன் அதிகரிப்பதை அரசாங்கம் உறுதி செய்யும்.

### மின்சார வாகன தொழில்நுட்பம்

வேலையில்லாத் திண்டாட்டத்தை குறைக்க அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்க தெளிவான கொள்கைகளுடன் வலுவான மற்றும் நிலையான அரசாங்கத்துடன் முதலீடுகள் தேவை என்று பிரதமர் கூறினார்.

"முதலீடுகளைப் பெறுவதற்கான வழிகளை அரசாங்கம் கண்டுபிடிக்க வேண்டும், உதாரணமாக, கீலி (சீனாவின் வாகன நிறுவனம் – Zhejiang Geely Holding Group Co Ltd), 4,000 வேலை வாய்ப்புகளைத் திறந்துள்ளது.

"கீலியின் கூற்றுப்படி, நம்மிடம் திறமையான பணியாளர்கள் உள்ளனர், ஆனால், இன்னும் சில குறைபாடுகள் உள்ளன. இந்த நிறுவனங்களுக்கு என்ன தேவை என்பதை அறிய உயர்கல்வி அமைச்சருடன் (டத்தோஸ்ரீ முகமட் கலீத் நோர்டின்) நான் விவாதித்தேன்," என்று அன்வார் கூறினார்.

மேலும் மின்சார வாகன (EV) சார்ஜிங் நிலையங்களை அதிகரிப்பது குறித்து டிவிஇடி மாணவர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்த பிரதமர், EVகளின் உற்பத்தி அதிகரிக்கும் போது அவை அதிகரிக்கப்படும் என்று கூறினார்.

"இது ஆற்றல் மாற்றம் என்று அழைக்கப்படுகிறது. பெட்ரோனாஸ் இந்த திங்கட்கிழமை ஒரு பெரிய சர்வதேச மாநாடு நடத்துகிறது, மேலும் EVகள் உட்பட மலேசியாவில் ஆற்றல் மாற்றம் தொடர்பான எங்கள் கொள்கையில் சில முக்கிய விஷயங்கள் நான் முன்வைக்க உள்ளேன், "என்று அவர் கூறினார்.

டிஜிட்டல் சிக்கல்கள், ஹைட்ரஜன் தொழில்நுட்பம் மற்றும் EVகளைப் பயன்படுத்துவதில் சிறந்த மாநிலங்களில் ஒன்றாக சரவாக் திகழ்வதற்காகவும் பிரதமர் பாராட்டினார்.

# RM18 பில்லியன் முதலீட்டு
## சிறந்த சாதனையாகும்



**ஷா ஆலம்,** சிலாங்கூர் மாநிலத்தின் சிறந்த முதலீட்டு சாதனை 2018ல் பதிவான RM18 பில்லியன் என்பதாகும். இந்த முதலீட்டு மதிப்பு 30 ஆண்டுகளில் சிறந்தது என்று சிலாங்கூர் பக்காத்தான் ஹராப்பானின் தலைவர் கூறினார்.

பெரிக்காத்தான் நேஷனல் தலைவர் டத்தோஸ்ரீ முகமட் அஸ்மின் அலியிடம் இருந்து மாநில நிர்வாகத்தை பொறுப்பேற்ற பிறகு இந்த வெற்றி கிடைத்ததாக டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

"நீங்கள் சிலாங்கூரின் மந்திரி புசாராக இல்லாத நேரத்தில், எங்களின் சிறந்த முதலீட்டு சாதனை RM18 பில்லியன் ஆகும். முகமட் அஸ்மின் சர்வதேச வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தைக் கவனித்து வந்தவர், ஆனால் அவருக்கு, இங்கு முதலீடு என்ன என்று தெரியவில்லை என்பதும் எனக்கு வருத்தமாக இருக்கிறது.

"அவர் மந்திரி புசாராக இருந்தபோது, முதலீட்டின் மதிப்பு RM 5 பில்லியனுக்கும் RM7 பில்லியனுக்கும் இடையில் இருந்தது," என்று நேற்றிரவு டத்தாரான் மெர்டேகாவில் சிலாங்கூர் ஹராப்பான் தேர்தல் எந்திரத்தை துவக்கி வைக்கும் போது அவர் குறிப்பிட்டார்.

அதே நேரத்தில் அவர் 2018 இல் மந்திரி புசாராக நியமிக்கப்பட்டது தொடர்பான முகமது அஸ்மின் கருத்தையும் விமர்சித்தார். ஆதரவாளர்களிடமிருந்து உற்சாகத்தைப் பெறுகையில், "முகமது அஸ்மின் மறந்துவிடாதீர்கள், ஆறு மாதங்களுக்கு முன்பு உங்களை தோற்கடித்தவன் நான் தான்" என்று கூறினார்.

கடந்த ஆண்டு நவம்பரில் (GE-15) நடைபெற்ற பொதுத் தேர்தலில், 12,729 வாக்குகள் பெரும்பான்மையுடன் முகமட் அஸ்மின் மூன்று தவணைகளாக வைத்திருந்த இடத்தை அமிருடின் கைப்பற்றினார்.

# ஐ.ஜி.பி. மாற்றப்படுவது
## வழக்கத்திற்கு மாறானது அல்ல



**புத்ராஜெயா,** ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட போலீஸ் அதிகாரிகள் அல்லது அரசு ஊழியர்கள் எந்த நேரத்திலும் பணி நீக்கம் செய்யப்படலாம் அல்லது சேவை காலம் குறைக்கப்படலாம் என்று உள்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ சைபுடின் நசுத்தியோன் இஸ்மாயில் கூறினார்.

டான்ஸ்ரீ அக்ரில் சானி அப்துல்லா வகித்து வந்த தேசியப் போலீஸ் படைத் தலைவர் (ஐ.ஜி.பி.) பதவிக்கு துணை ஐ.ஜி.பி. டான்ஸ்ரீ ரஸாருடின் ஹூசேன் நியமிக்கப்பட்டது வழக்கமான நடைமுறையாகும் என்று அவர் தெரிவித்தார்.

இதில் சர்ச்சை என்று எதுவும் இல்லை. வேறு எதையும் அனுமானிக்காதீர்கள். மாட்சிமை தங்கிய பேரரசரை முதலில் நானும் பின்னர் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிமும் சந்தித்தோம். இந்த விவகாரம் சமூகமான முறையில் மேற்கொள்ளப்பட்டது என்றார் அவர்.

இது குறித்து நான் டான்ஸ்ரீ அக்ரில் சானியிடமும் பேசியுள்ளேன். இன்று கோலாலம்பூரில் உள்ள போலீஸ் பயிற்சி மையத்தில் பதவி ஏற்பு மற்றும் ஒப்படைப்பு சடங்கை நடத்தவுள்ளோம். இதில் சர்ச்சைக்குரிய விஷயம் எதுவும் இல்லை என்று அவர் தெளிவுபடுத்தினார்.

இங்குள்ள உள்துறை அமைச்சில் ஊடக ஆசிரியர்களுடன் உள்துறை அமைச்சரின் பிரத்தியேகச் சந்திப்பு நிகழ்வின் போது அவர் இவ்வாறு சொன்னார்.

கடந்த 2021ஆம் ஆண்டு அக்டோபர் 4 ஆம் தேதி பதவி ஓய்வு பெற்ற டான்ஸ்ரீ அக்ரில் சானி மேலும் ஈராண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் தேசிய போலீஸ் படைத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

அவரின் பதவிகாலம் இவ்வாண்டு அக்டோபர் 4ஆம் தேதி முடிவுக்கு வருகிறது.



# 381,251 டேப்லட்கள் பெரந்தி சிஸ்வா திட்டம்

**மாச்சாங்,** செப்டம்பர் 2022 முதல் தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் அமைச்சகத்தின் தலைமையிலான பெரந்தி சிஸ்வா `PerantiSiswa திட்டத்தின் மூலம் நாடு முழுவதும் மொத்தம் 381,251 மாத்திரைகள் (டேப்லட்கள்) விநியோகிக்க பட்டுள்ளன.

இந்த திட்டம் B40 குடும்பங்களைச் சேர்ந்த இளங்கலைப் பட்டதாரிகள் மற்றும் மாணவர்களின் சுமூகமான கற்றல் செயல் முறைக்கு உதவுவதை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது என்று தகவல் தொடர்பு மற்றும் டிஜிட்டல் அமைச்சர் ஃபஹ்மி ஃபட்சில் கூறினார்.

"கிளந்தானில், மொத்தம் 29,609 பேர் பெரந்தி சிஸ்வா திட்டத்தின் கீழ் உதவி பெற அடையாளம் காணப்பட்டு இன்றுவரை 24,525 டேப்லட்கள் விநியோகிக்கப்பட்டு உள்ளன," என்று அவர் கூறினார்.

பல்கலைக்கழக டெக்னாலஜி மாரா (யுஐடிஎம்) மாச்சாங் கேம்பஸ் அருகில் 'கிளந்தானில் எனது டிஜிட்டல் பயணம் 2023' நிகழ்ச்சியில் இன்று கேகேடி பொதுச்செயலாளர் டத்தோ முகமட் ஃபௌசி முகமட் இசா கலந்து கொண்டபோது அவர் இவ்வாறு கூறினார்.

இந்நிகழ்ச்சியில் யுஐடிஎம் துணைவேந்தர் பேராசிரியர் டத்தோ டாக்டர் ரோசியா முகமட் ஜானோர் மற்றும் மலேசிய தேசிய செய்தி நிறுவனத்தின் (பெர்னாமா) தலைமை நிர்வாக அதிகாரி ரோஸ்லான் அரிஃபின் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நான் இலக்கவியல் 'சயா டிஜிட்டல்' பிரச்சாரம் டிஜிட்டல் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக அது சம்பந்தப்பட்ட திறன்களைக் கொண்ட மக்களைத் தயார்படுத்துவதற்காக நடத்தப்படுகிறது, குறிப்பாக B40 குழு, முதியவர்கள், சமூக-பொருளாதார ரீதியாக பாதிக்கப்படக்கூடிய சமூகங்கள், மாணவர்கள் மற்றும் தொழில்முனைவோர்களுக்காக என அவர் மேலும் கூறினார்.

"சயா டிஜிட்டல் பிசினஸ்' திட்டத்தின் கீழ் கிளந்தனில் மொத்தம் 27,595 தொழில்முனைவோருக்கு வெற்றிகரமாக பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது. அதன் மொத்த விற்பனை RM1.1 பில்லியனைத் தாண்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

"மேலும், `MyDIGITAL. KKD" போர்ட்டல் என்பது மக்களுக்கான பல்வேறு அரசு சேவைகளை டிஜிட்டல் மயமாக்கும் நோக்கத்தின் அடிப்படையில் கேகேடியால் உருவாக்கப்பட்ட ஒரு மையமாகும்," என்று அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் ஏறக்குறைய 500 மாணவர்கள் மற்றும் உள்ளூர் தொழில் முனைவோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சி டிஜிட்டல் காலத்தை நோக்கிய பார்வைக்கு ஏற்ப மக்களின் டிஜிட்டல் திறன்களை மேம்படுத்தும் ஒரு களத் திட்டமாகும், இதன் மூலம் மலேசியாவை ஆசிய அளவில் டிஜிட்டலில் சிறந்த ஒரு நாடாக மாற்ற இயலும்.

# முதலீட்டாளர்கள் மத்தியில்
## நம்பிக்கை அதிகரிப்பு



**புத்ராஜெயா,** மலேசியா மீதான நம்பிக்கை முதலீட்டாளர்கள் மத்தியில் அதிகரித்து வருகிறது. எதிர்காலத்தில் மேலும் அதிகமான முதலீடுகள் நாட்டிற்கு வருவதற்கான உந்து சக்தியாக இது விளங்குகிறது என்று தொடர்பு மற்றும் இலக்கவியல் துறை அமைச்சர் ஃபாஹ்மிஃ பாட்சில் கூறினார்.

அண்மையில் நடந்து முடிந்த 2023 லண்டன் தொழில்நுட்ப வார கூட்டத்தில் கலந்து கொண்ட முதலீட்டாளர்கள் தம்மிடம் தெரிவித்த தகவலின் அடிப்படையில் இந்த நம்பிக்கையைத் தாம் வெளிப்படுத்துவதாக இன்று இங்கு நடைபெற்ற அமைச்சின் மாதாந்திர ஒன்று கூடும் நிகழ்வில் உரையாற்றும் போது அவர் தெரிவித்தார்.

இம்மாதம் 12 முதல் 16ஆம் தேதி வரை நடைபெற்ற இந்த லண்டன் முதலீட்டு வார நிகழ்வில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பல்வேறு துறைகளில் 830 கோடி வெள்ளி மதிப்பிலான முதலீட்டுக் கடப்பாட்டை மலேசியப் பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார். முதலீட்டாளர்கள் மத்தியில் நேர்மறையான எண்ணத்தை நாம் விதைத்துள்ளோம். மலேசியாவின் இலக்கு, அரசியல் நிலைத்தன்மை மற்றும் ஆற்றல் ஆகியவை முதலீட்டுக்கான குவிய மையமாக விளங்குகிறது என அவர்கள் கருதுகின்றனர் என்றார் அவர். முதலீட்டாளர்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இது விரைவில் சாத்தியமாகும். அதிகமான முதலீடுகள் நாட்டிற்கு வரும் என அவர் சொன்னார்.

# வெ.100 கோடி மதிப்புள்ள சுய கடன் விண்ணப்பம்

**கோலாலம்பூர்,** இவ்வாண்டு ஜூன் 11ஆம் தேதி வரையிலான காலக்கட்டத்தில் ஊழியர் சேம நிதி வாரியத்தின் (இ.பி.எஃப்.) இரண்டாவது கணக்கிலிலுள்ள பணத்தை அடமானமாக வைத்து கடன் பெறுவது தொடர்ப்பில் 98 கோடியே 19 லட்சம் வெள்ளி மதிப்புள்ள விண்ணப்பங்களுக்கு கடன் வழங்கப்பட்டு-ள்ளதாக நிதியமைச்சு கூறியது.

அந்த தொகையில் 87 கோடியே 86 லட்சம் வெள்ளி மலேசியா பில்டிங் சொசைட்டி பெர்ஹாட் (எம்.பி.எ.பி.) வாயிலாகவும் 10 கோடியே 33 லட்சம் வெள்ளி பேங்க் சிம்பானான் மூலமாகவும் மீட்கப்பட்டதாக அது தெரிவித்தது. எஃப்.எஸ்.ஏ.2 எனப்படும் இந்த கடனுதவித் திட்டத்திற்கு 168,925 பேரிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைத்த வேளையில் 88,414பேரின் விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டன.

அவர்களில் 47,696 பேர் இந்த கடனுதவியை ஏற்றுக் கொள்ள ஒப்புதல் அளித்தனர் என்று மேலவையில் இன்று வழங்கப்பட்ட எழுத்துப்பூர்வ பதிலில் அமைச்சு கூறியது.

ஊழியர் சேம நிதிப் பணத்தை அடமானமாக வைத்து கடன் பெறும் திட்டத்திற்கு விண்ணப்பம் செய்த இ.பி.எஃப். சந்தாதாரர்களின் எண்ணிக்கை குறித்து செனட்டர் டாக்டர் வான் மார்த்தினா வான் யூசுப் கேள்வியெழுப்பியிருந்தார்.



# 39 கிளினிக்குகளைச் சீரமைக்க வெ.96 லட்சம் ஒதுக்கீடு

**கோத்தா பாரு,** கிளந்தான் மாநிலத்தில் மோசமான நிலையிலுள்ள 39 சுகாதார கிளினிக்குகளைச் சுகாதார அமைச்சு அடையாளம் கண்டுள்ள வேளையில் அவற்றை புனரமைப்பு செய்வதற்கு 96 லட்சம் வெள்ளியை ஒதுக்கீடு செய்துள்ளது.

சீரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கு அடையாளம் காணப்பட்டுள்ள கிளினிக்குகளில் 8 கிராமக் கிளினிக்குகள், 18 சுகாதாரக் கிளினிக்குகள் மற்றும் 13 பல் கிளினிக்குகளும் அடங்கும் என்று சுகாதார அமைச்சர் டாக்டர் ஜலிஹா முஸ்தாபா கூறினார்.

இந்த சீரமைப்புப் பணிகள் சீராக நடைபெறுவதை உறுதி செய்வதற்காக மோசமான நிலையிலுள்ள சுகாதார வசதிகளை தரம் உயர்த்துவதற்கான சிறப்பு பணிக்குழுவைச் சுகாதார அமைச்சு அமைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். கிளினிக்குகளில் மேற்கொள்ளப்படும் சீரமைப்பு பணிகளின் மேம்பாட்டைக் காண்காணிக்கும் பொறுப்பு இந்த சிறப்பு பணிக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

மலேசியர்களுக்குத் தரமான மருத்துவச் சேவை வழங்குவதற்கும் சுகாதாரப் பணியாளர்களுக்கு வசதியான சூழலை ஏற்படுத்தித் தருவதற்கும் ஏதுவாக மேற்கொள்ளப்படும் இந்த திட்டங்கள் சீரான முறையில் நிறைவேற்றப்படும் எனத் தாங்கள் நம்புவதாக அவர் தனது பேஸ்புக் பதிவில் தெரிவித்தார்.

**SELANGOR INDRU**

Sidang pengarang

**PENASIHAT**
Lembaga Editorial MSSB

**PENGARANG KUMPULAN**
Fathi Aris Omar

**KETUA PENGARANG**
A.Pakiyanathan

**PENOLONG PENGARANG**
Rajah Ramaya

**ARTIS GRAFIK**
Kathiravan Manoharan

**JURUGAMBAR**
Asri Sapfie,
Raheemie Arifiri,
Hafiz Othman & Fikri Yusof

**Aras 11, Menara Bank Rakat, No1 Jalan Indah 14/8, Seksyen 14, 4000 Shah Alam.**

*Tel: 03-5523 4856*
*Faks: 03-5523 5856*
*Email: info@mediaselangor.com*

# சமையல் எண்ணெய் விலையை தொடர்ந்து நிலை நிறுத்தும்



**ஷா ஆலம்,** மக்களின் வாழ்க்கைச் செலவின குறைக்கும் நோக்கில் உதவித்தொகை வழங்கப்பட்ட சமையல் எண்ணெய்க்கான விலையை உயர்த்த அரசாங்கம் எண்ணம் கொண்டிருக்கவில்லை.

நிச்சயமற்ற பொருளாதார நிலை காரணமாக பொதுமக்கள் இன்னும் சிரமத்தில் ஆழ்ந்திருப்பதை அரசாங்கம் உணர்ந்துள்ளதாக வர்த்தக மற்றும் வாழ்க்கைச் செலவின அமைச்சர் டத்தோஸ்ரீ சலாவுடின் ஆயோப் கூறினார்.

குடும்பத்தைப் பராமரிப்பதில் மக்கள் இன்னும் சிரமத்தில் உள்ளதால் எந்தவொரு விலையேற்றத்தையும் அறிவிக்க அரசாங்கத்திற்கு இன்னும் காலம் கனியவில்லை என்று அவர் தெரிவித்தார்.

ஆகவே, பாக்கெட் சமையல் எண்ணெய்க்கான உதவித்தொகையை குறைக்கவோ அந்த அத்தியாவசிய உணவுப் பொருளுக்கான விலையை உயர்த்தவோ அரசாங்கம் திட்டமிடவில்லை என்று அவர் மேலும் சொன்னார்.

மக்களவையில் இன்று பாக்கெட் சமையல் எண்ணெய் பற்றாக்குறை பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கு அமைச்சு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து ஷா ஆலம் தொகுதி பக்கத்தான் ஹராப்பான் உறுப்பினர் அஸ்லி யூசுப் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாக்கெட் சமையல் எண்ணெய் பற்றாக்குறை பிரச்சனைக்குத் தீர்வு காணும் விதமாக கிலோ 2.50 ஆக இருக்கும் அந்த சமையல் பொருளின் விலையை மேலும் ஒரு வெள்ளி உயர்த்தவும் அஸ்ரி யூசுப் பரிந்துரைத்தார்.

மானிய விலை சமையல் எண்ணெய் மக்களுக்கு நியாயமான முறையில் கிடைப்பதை உறுதி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்ட மானிய விலை விற்பனை திட்டத்தை இவ்வாண்டு இறுதிவாக்கில் அறிமுகம் செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று சலாவுடின் கூறினார்.

# உள்நாட்டு அரிசி - கிலோ வெ.2.60ஆக நிலை நிறுத்தப்படும்

**ஷா ஆலம்,** உள்நாட்டு அரிசியின் விலை உயர்வு காணவில்லை. அது கிலோ ஒன்றுக்கு வெ.2.60 ஆக நிலை நிறுத்தப்பட்டுள்ளது. முன்பு விலையேற்றம் கண்டுள்ளதாகக் கூறப்பட்டது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உயர் ரக அரிசியாகும் என்று உணவு உத்தரவாதத் துறை அமைச்சர் டத்தோஸ்ரீ முகமது சாபு கூறினார்.



அரிசியின் விலை 5 விழுக்காடு உயர்ந்து விட்டதாகத் தற்போது பரபரப்பாகப் பேசப்படுகிறது. வசதியானவர்கள் உண்ணக்கூடிய உயர் ரக இறக்குமதி அரியே விலையேற்ற கண்டுள்ளது என்பதை இங்கு வலியுறுத்த விரும்புகிறேன் என்று அவர் சொன்னார்.

அதே சமயம் பொது மக்களுக்கு, அதாவது மலேசியர்களுக்குக் கிலோ வெ.2.60 என்ற விலையில் மட்டுமே அரிசி விற்கப்படுகிறது என்று நாடாளுமன்றத்தில் கேள்வி நேரத்தின் போது அவர் தெரிவித்தார்.

அனைத்துலக உணவு பாதுகாப்பு குறியிட்டில் மலேசியாவின் இடத்தை மேலும் மேம்படுத்துவதற்கு உணவு உத்தரவாத அமைச்சு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து சண்டகான் உறுப்பினர் விவியன் வோங் ஷிர் யீ எழுப்பியக் கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இவ்வாறு சொன்னார்.

உள்நாட்டு அரசி உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்கு பெரிய அளவிலான விவேக வேளாண் திட்டம் உள்ளிட்ட முன்னெடுப்புகளை அமைச்சு மேற்கொண்டு வருவதாக முகமது சாபு தெரிவித்தார்.

தற்போது பெரும்பாலும் முதியவர்களே விவசாயத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். பெரிய அளவில் நவீன தொழில்நுட்பத்தில் விவசாயத்தை மேற்கொள்வதன் மூலம் இத்துறையில் இளையோரின் பங்கேற்பையும் அதிகரிக்க முடியும். குறிப்பாக கெடா மாநிலத்தில் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற இளைஞர்கள் டிரோன் சாதனங்களை இயக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர் என்றார் அவர்.

# பரம ஏழ்மைக்கு நிலைக்கு இவ்வாண்டே முற்றுப்புள்ளி

**நீலாய்,** இந்நாட்டில் உள்ள பரம ஏழ்மை நிலைக்கு இவ்வாண்டு இறுதிக்குள் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அனைத்து அரசு இயந்திரங்களும் குறிப்பாக, கிராம மற்றும் மேம்பாட்டு துறை அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள துறைகள் முழுவீச்சில் செயல்பட வேண்டும் என்று அவர் கூறினார்.



நெகிரி செம்பிலான் உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இவ்வாண்டிற்குள் பரம ஏழ்மை நிலை முற்றாக துடைத்தொழிக்க பட வேண்டும் என்று இன்று இங்கு “செந்தோஹான் காசே டேசா” எனும் நிகழ்வை தொடக்கி வைத்து உரையாற்றுகையில் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் துணை பிரதமரும் கிராம மற்றும் வட்டார மேம்பாட்டுத்துறை அமைச்சருமான டத்தோ ஸ்ரீ டாக்டர் சாஹிட் ஹமிடி, நெகிரி செம்பிலான் மந்திரி புசார் ஸ்ரீ அமிருடன் ஹருண், தற்காப்பு அமைச்சர் முகமது ஹாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதிக எண்ணிக்கையில் உள்ள மலாய்க்காரர்கள் தவிர்த்து சீனர்கள், இந்தியர்கள், பூர்வ குடியினர், மற்றும் சபா, சரவா உட்புற பகுதியில் வசிக்கும் ஏழைகளின் வாழ்க்கையை உயர்த்தும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அமைச்சாகவும் கிராம மற்றும் வட்டார மேம்பாட்டு துறை அமைச்சு விளக்குகிறது என்று அன்வார் சொன்னார். பெரிய மட்டும் பிரமாண்ட திட்டங்களில் மட்டும் அமைச்சு தனது முழு கவனத்தையும் செலுத்தாமல் ஏழைகளை வறுமையில் இருந்து மீட்பதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

நாம் அதிவிரைவு ரயில் திட்டம், கிழக்குக்கரை ரயில் திட்டம், இரட்டைக் கோபுரம், புத்ரா ஜெயா போன்ற பெருந்திட்டங்களை பற்றி மட்டும் விவாதிக்கவில்லை. மாறாக, பிள்ளைகளுக்கு பால் வாங்க முடியாத பள்ளி சீருடைகள் வாங்க முடியாத நிலையில் இருக்கும் ஏழைகள் மீதும் நம் கவனம் செலுத்த வேண்டும் என அவர் சொன்னார்.

# 80 லட்சம் பேர் ரஹ்மா

## உதவித் தொகையைப் பெறுவர்

**ஷா ஆலம்,** குறைந்த வருமானம் பெறும் பி40 குழுவைச் சேர்ந்த எண்பது லட்சத்திற்கும் மேற்பட்டோர் இம்மாதம் 26ஆம் தேதி தொடங்கி மூன்றாம் கட்ட ரஹ்மா உதவித் தொகையை கட்டங் கட்டமாகப் பெறுவர் என்று நிதியமைச்சு கூறியது.

பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கடந்த வாரம் அறிவித்ததைப் போல் இந்த உதவித் தொகை பகிர்ந்தளிப்பு விரைவுபடுத்தப்பட்டு ஹஜி பெருநாளுக்கு முன்னதாக வழங்கப்படும் என்று அது தெரிவித்தது.

இந்த ரஹ்மா உதவித் திட்டத்திற்காக 200 கோடி வெள்ளி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியைப் பகிர்ந்தளிக்கும் பணி வரும் ஜூலை மாதம் 5ஆம் தேதிக்குள் முற்றுப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. தகுதி அடிப்படையில் விண்ணப்பதாரர்களுக்கு 100 வெள்ளி முதல் 1,300 வெள்ளி வரை இந்த ரஹ்மா நிதி பகிர்ந்தளிக்கப்படும்.

வங்கியில் சேமிப்புக் கணக்கு இல்லாதவர்கள் எதிர்வரும் ஜூன் 26ஆம் தேதி பேங்க் சிம்பானான் நேஷனல் வங்கிகளில் ரொக்கத் தொகையைப் பெற்றுக் கொள்ளலாம் என்று நிதியமைச்சின் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ரஹ்மா உதவித் திட்டத்தின் முதல் மற்றும் இரண்டாம் கட்ட நிதியளிப்பு கடந்த ஜனவரி மற்றும் ஏப்ரல் மாதங்களில் மேற்கொள்ளப்பட்டது. இந்த மூன்றாம் கட்ட ரஹ்மா உதவி நிதித் திட்டத்திற்கு 2023 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 500 கோடி வெள்ளி ஒதுக்கப்பட்டது.

# 15 ஆண்டுகள் வளர்ச்சியை

## கருத்தில் கொண்டு முடிவெடுப்பீர்

**ஷா ஆலம்,** விரைவில் நடைபெறவிருக்கும் மாநிலத் தேர்தலில் திரண்டு வந்த வாக்களிப்பதன் மூலம் தங்களின் ஜனநாயகக் கடமையை நிறைவேற்றும்படி மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி மாநில மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.



மாநில அரசு நிர்வாகத்தின் அடுத்தக் கட்ட இலக்கையும் மக்களின் எதிர்காலத்தையும் தீர்மானிப்பதற்கு இந்நடவடிக்கை முக்கியமானதாக விளங்குகிறது என்று அவர் சொன்னார்.

மக்களின் நலன் கருதியும் கடந்த காலங்களில் ஆற்றிய சிறந்த சேவையின் அடிப்படையிலும் சிறப்பான தேர்வை செய்யும்படி வாக்காளர்களை அவர் கேட்டுக் கொண்டார்.

நான் எனது சேவைகளைத் தரவுகள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் முன்வைக்கிறேன். பொதுமக்கள் பகுத்தாய்வு செய்து சிறந்த மற்றும் தங்களுக்கு நன்மை செய்யக்கூடியவர்கள் என கருதுவோரை தேர்ந்தெடுப்பர் என நம்புகிறேன் என்றார் அவர்.

உங்கள் ரசனை மற்றும் விருப்பத்திற்கேற்ப தேர்வு செய்யுங்கள். அதேவேளையில் ஓராண்டு அல்ல, மாறாக 15 ஆண்டு காலத்தில் சிறப்பான அடைவு நிலையின் வாயிலாகப் புரிந்த சாதனைகளையும் ஒப்பிட்டு பாருங்கள் என அவர் தெரிவித்தார். நேற்றிரவு சிலாங்கூர் டிவியின் டிக் டாக் நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் கூறினார்.

ஒவ்வொரு நிர்வாகத்தின் சாதனை மற்றும் அடைவுநிலையை நியாயமான கால அவகாசத்தின் அடிப்படையில் மதிப்பீடு செய்ய வேண்டும் என்றும் அமிருடின் குறிப்பிட்டார்.



# கிள்ளான் - சபாக் பெர்ணம்

## இரயில் தடம் அமைக்க திட்டம்

**ஷா ஆலம்,** கோல சிலாங்கூர் மற்றும் சபாக் பெர்ணம் மாவட்டங்களை உட்படுத்திய மாநிலத்தின் வட பகுதியில் இரயில் தடத்தை அமைக்க சிலாங்கூர் அரசு திட்டமிட்டுள்ளது.

மாநிலத்தின் வட பகுதியான உலு சிலாங்கூரில் கெம்யூட்டர் எனப்படும் பயணிகள் இரயில் மற்றும் இ.சி.ஆர்.எல். எனப்படும் கிழக்குக் கரை இரயில் திட்டம் ஆகிய சேவைகள் அமல்படுத்தப்பட்டுள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

வெவ்வேறு இடங்களில் உள்ள மக்களை ஒன்றிணைப்பதற்கு ஏதுவாக சிறிய அளவிலான பொது போக்குவரத்துச் சேவைகள் ஏற்படுத்தப்படுவதை மாநில அரசு ஊக்குவிக்கிறது என்று அவர் கூறியதாக உத்துசான் மலேசியா செய்தி வெளியிட்டுள்ளது.

சிக்கனமான இணைப்பை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக இந்த திட்டத்தை நாம் வடிமைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. குறைந்த பட்சம் இதன் தொடர்பில் கொள்கையாவது நாம் வகுக்க முடியும். இவ்வாறு செய்வதன் மூலம் சபாக் பெர்ணமில் வசிக்கும் ஒருவர் ஷா ஆலமில் வேலை செய்வதற்குரிய சாத்தியம் ஒரு நாள் உருவாகும் என அமிருடின் சொன்னார்.

உண்மையில் மாநிலத்தின் வட பகுதியுடன் நாம் முழுமையான இரயில் போக்குவரத்து இணைப்பைக் கொண்டிருக்கவில்லை. சாலை போக்குவரத்தை எடுத்துக் கொண்டால் கிள்ளானிலிருந்து கோல சிலாங்கூர் மற்றும் சபாக் பெர்ணம் வரை தரைவழி போக்குவரத்து வசதி உள்ளது. ஆனால், இரயில் தொடர்பு சேவை இன்னும் ஏற்படுத்தப்படவில்லை என்றார் அவர்.

பன்னிரண்டாவது மலேசியத் திட்டத்தின் மத்திய கால தவணைக்கான ஆய்வு தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வின் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

Diterbikan oleh **Media Selangor Sdn Bhd** (Sebelumnya dikenali **Communication Sdn Bhd**), Aras 11, Menara Bank Rakat, No1 Jalan Indah 14/8, Seksyen 14, 4000 Shah Alam, Selangor. Dicetak oleh **Ultimate Print Sdn Bhd** Lot 2, Jalan Sepana 15/3, off persiaran Seksyen 15, 40200 Shah Alam, Selangor